University of Madras — B. A. Examination 1912.

PURANANURU (101 - 125)

With commentary

Edited with explanatory notes

BY

V. SWAMINATHAIYAR,

Tamil Pandit, Presidency College, Madras.

Price 8 Annas.

Madras:

PRINTED AT THE VAIJAYANTI PRESS,

Mount Road.

1911.

இப்புத்தகத்திலடங்கியவை.

கணபதி துணை.

முகவுரை.

புறநானூறென்பது, அமிழ்திற் சிறந்த தமிழ்மொழியதனை ஒன்பான் சுவைபுணர்த் தன்பால் வளர்த்தருள் நச்சும் பெருமை * முச்சங்கத்துட் கடைச்சங்கப்புலவர்கள் அருளிச்செய்த எட்டுத்தொகையுள் ஒன்று; எட்டுத்தொகையாவன: நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை அகநானூறு புறநானூறு என்பன. இதனை அடியில்வரும் வெண்பாவாலுணர்க.

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

இவற்றுள் ஒவ்வொன்றும் பலராற் செய்யப்பட்டுத் தொழில், அளவு, பாட்டு, பொருளென்பனவற்றுள் ஒவ்வொன்றால் தொகுக்கப்பட்டமையின், இவை தொகையென்று பெயர்பெற்றனவென்பர்.

இவற்றுள்,—

௧. நற்றிணை:—இது, கடவுள்வாழ்த்துச் செய்யுள்முதலிய ௪0௧ - அகவற்பாக்களையுடையது; இப்பாக்களுள், முதற்செய்யுளாகிய கடவுள்வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாராலும், மற்றை நானூறுபாக்களும் கபிலர்முதல் ஆலங்குடிவங்கனாரிறுதியாகவுள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டன; பொருளின்பகுதியாகிய அகம் புறமென்னுமிரண்டனுள் அகத்தின்பகுதிகளையே பொருளாகவுடையது. மேற்கூறிய அகவற்பாக்கள், ஒன்பதடிச்சிறுமையும் பன்னிரண்டடிப்பெருமையுமுள்ளவைகள். இத்தொகைதொகுப்பித்தோன், பன்னாடுதந்தபாண்டியன்மாறன்வழுதி. இதற்கு உரை கிடைத்திலது.

௨. குறுந்தொகை:—இது கடவுள்வாழ்த்துச் செய்யுள் முதலிய ௪0௨ - அகவற்பாக்களையுடையது. இவற்றுள் முதற்பாவாகிய கடவுள் வாழ்த்துப் பாரதம்பாடிய பெருந்தேவனாராலும் மற்றை

* முச்சங்கத்தின் வரலாறுகளை இறையனாரகப்பொருளுரையிலும், சிலப்பதிகாரவுரையிலும் காண்க.

முகவுரை.

௪௦௧ - பாக்கள் திப்புத்தோளார்முதல் அம்மூவனாரிறுதியாகவுள்ள புலவர் இருநூற்று நால்வராலும் இயற்றப்பட்டுள்ளன; அகத்தின்பகுதிகளையே பொருளாகவுடையது. மேற்கூறிய அகவற்பாக்கள் நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உள்ளவைகள். இத்தொகைமுடித்தான் பூரிக்கோ. இஃது அளவால் தொகுக்கப்பட்டதென்பர். இத்தொகையின் பாக்களுள் இருபது பாக்களொழிந்த மற்றைப்பாக்களுக்குப் பேராசிரியர் பொருளெழுதினாரென்றும், அவரெழுதாதொழிந்த இருபதுபாக்களுக்கும் நச்சினார்க்கினியர் பொருளெழுதினாரென்றும் பின்னுள்ளபாடல்கள் உணர்த்துகின்றன. "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு, மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ் - சாரத், திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும், விருத்திநச்சி னார்க்கினிய மே," "நல்லறி வுடைய தொல்பே ராசான், கல்வியுங் காட்சியுங் காசினி யறியப், பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற், கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய, விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்"; இவை நச்சினார்க்கினியருரைச் சிறப்புப்பாயிரம். "பேராசிரிய நும் 'யானே யீண்டையேனே' என்னுங் குறுந்தொகைச்செய்யுளில் நீனெறி தூண்டி லென்பதனை வினையுவமமென்றார்" என்று தொல்காப்பியம், அகத்திணையியல் ௩௯ - ம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலாலும் இத்தொகைக்குப் பேராசிரியர் பொருளெழுதினாரென்பது ஊகித்தறியப்படுகின்றது. அவ்வுரை கிடைத்திலது

௩. ஐங்குறுநூறு:—இஃது அகத்தின் பகுதியாகிய மருதமுதலிய ஐந்திணைகளையும் நூறு நூறு அகவற்பாக்களால் விளக்குவது; கடவுள்வாழ்த்துச்செய்யுள் முதலிய ௫௦௧ - அகவற்பாக்களையுடையது; இப்பாக்களுள் கடவுள்வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாராலும், மருதத்திணையைக்குறித்த முதனூறு ஓரம்போகியாராலும், நெய்தற்றிணையைக்குறித்த இரண்டாநூறு அம்மூவனாராலும், குறிஞ்சித்திணையைக்குறித்த மூன்றாநூறு கபிலராலும், பாலைத்திணையைக் குறித்த நான்காநூறு ஓதலாந்தையாராலும், முல்லைத்திணையைக் குறித்த ஐந்தாநூறு பேயனாராலும் இயற்றப்பட்டுள்ளன. இதனை அடியில்வரும் வெண்பாவானுணர்க.

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலர் - கருதிய
பாலையோ தல்லாந்தை பன்முல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு."

இதிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமை தெரியவில்லை. இத்தொகை தொகுத்தார் புலத்துறைமுற்றிய கூடலூர்கிழார்; தொகுப்பித்தான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை. இதற்கு உரை கிடைத்திலது.

௪. பதிற்றுப்பத்து:—இது சேரர்குலத்தாரைமேய பாடியது. இத்தொகையால் அக்காலத்திருந்த சேரர்பலருடைய வள்ளன்மையும் வீரமும் பின்னுமுள்ள வரலாறுகள் பலவும் நன்குபுலப்படும். இஃது, ஒவ்வொருபுலவர் பப்பத்தாகச்செய்த நூறுபாட்டுக்களையுடையது. இதனாலேயே, இத்தொகை பத்துப்பகுதியாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முதற்பத்தும் பத்தாம்பத்தும் இப்பொழுது பலவிடத்துப்பிரதிகளிலும் காணப்படாமையால் அவை இறந்தனபோலும். எஞ்சியவற்றுள்,—

இரண்டாம்பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார்பாடி உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயம்பெற்று முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள்வருவதனிற்பாகமும் பெற்றது.

மூன்றாம்பத்து, இமயவரம்பன்றம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கோதமனார்பாடிச் சுவர்க்கம்பெற்றது.

நாலாம்பத்து, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக்காப்பியாற்றுக்காப்பியனார்பாடி நாற்பதுநூறாயிரம்பொன் பரிசிலும் அவன் ஆள்வதிற்பாகமும் பெற்றது.

ஐந்தாம்பத்து, கோச்செங்குட்டுவனைப்பரணர்பாடி உம்பற்காட்டுவாரியையும் அவன்மகன் குட்டுவன்சேரலையும் பரிசில்பெற்றது.

ஆறாம்பத்து, ஆடுகோட்பாட்டுச்சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார்பாடி ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங்காணமும்பெற்று அவன்பக்கத்து இருத்தல்கொண்டது.

ஏழாம்பத்து, செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர்பாடி நூறாயிரங் காணமும் அவன் ஒரு பெரிய மலைமீதேறிக் கண்டுகொ த்தநாடும் பரிசில்பெற்றது.

எட்டாம்பத்து, தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையை அசில்கிழார்பாடி ஒன்பது நூறாயிரங்காணம் பரிசில்பெற்றது.

ஒன்பதாம்பத்து, குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையை பெருங்குன்றூர்கிழார்பாடி முப்பத்தீராயிரங் காணமுதலியனபெற்றது.

முகவுரை.

இந்நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமை புலப்படவில்லை. இத்தொகையைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரின்னாரென்பதும் தெரியவில்லை. இதற்கு அரும்பத வுரை யொன்றுண்டு.

௫. பரிபாடல்:—ஒருவகைப் பாவின் பெயராகிய பரிபாட லென்பது அப்பாவாலாகிய நூலுக்காயிற்று. இஃது, எழுபதுபாட் டுக்களையுடையதென்றும், அவ்வெழுபதுள் ௮ - பாட்டு - திருமாலுக் கும் ௩௧ - குமரவேளுக்கும் ௧ - கடலுக்கும் ௨௬ - வையையாற்றிற் கும் ௪ - மதுரைக்குமாகப் பகுக்கப்பட்டுள்ளனவென்றும் அடியில் வரும் வெண்பா விளக்குகின்றது.

> "திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
> தொருபாட்டுக் காடுகாட் கொன்று - மருவினிய
> வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
> செய்யபரி பாடற் றிறம்."

அவ்வெழுபதுபாடல்களுள் இப்பொழுது கிடைத்தவை இரு பதே; மற்றவை பிரதிகளிற் காணப்படவில்லை. இயற்றிய ஆசிரியர் களின்பெயர் அவ்வப்பாட்டுக்களின்பின்னர் எழுதப்பட்டுள்ளன. இந் நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமை பெருமை விளங்க வில்லை. இத்தொகை தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரின் னாரென்பது புலப்படவில்லை. இத்தொகை பாட்டாற் றொகுக்கப்பட் டது. இதற்குப் பழையவுரையொன்றுளது.

௬. கலித்தொகை:—இது கடவுள்வாழ்த்துச் செய்யுள் முத லிய நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது; அகத்தின்பகுதியாகிய பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலென்னுமைந்திணைக்கு முரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்களை இனிதுவிளக்கு வது; சொல்லினிமை பொருளினிமையில் மிகச்சிறந்தது. இதிலுள்ள செய்யுட்கள் பலபுலவராற் செய்யப்பட்டனவென்று பழையவுரை களைக்கொண்டுணர்ந்தறியப்படுமாயினும், கிடைத்தபிரதிகளில் அவ் வச்செய்யுளின் பின்னர் இயற்றிய ஆசிரியர்களின்பெயர்கள் மற்றைத் தொகைகளிற்போல எழுதப்படாமையின் இயற்றியவர் இன்னாரின்னா ரென்று தெரிந்துகொள்ளக்கூடவில்லை. இந்நூலிலுள்ள பாக்களி னுடைய அடிகளின் சிறுமைபெருமையும் விளங்கவில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் உரைசெய்திருக்கின்றனர். இது குறுங்கலித் தொகையென்றும் கலியென்றும் கூறப்படும். இத்தொகை பாவாற் றொகுக்கப்பட்டது.

முகவுரை.

௭. அகநானூறு:—இது கடவுள்வாழ்த்துச்செய்யுள் முதலிய ௪00 - அகவற்பாக்களையுடையது; இவற்றுள், பாரதம்பாடியபெருந்தேவனாரால் முதற்செய்யுளாகிய கடவுள்வாழ்த்தும், மாமூலனார் முதல் உலோச்சனாரீறாகவுள்ள புலவர்பலரால் மற்றைநானூறும் இயற்றப்பட்டுள்ளன; அகத்திணைப் பகுதிகளையே பொருளாகவுடையது. மேற்கூறிய அகவற்பாக்கள் பதின்மூன்றடிச்சிறுமையையும் முப்பத்தோரடிப் பெருமையையுமுள்ளவைகள். இவற்றுள் கடவுள்வாழ்த்தொழிந்த நானூறுபாக்களில் முன்னுள்ள ௧௨0 - பாக்கள் களிற்றியானைநிரையெனவும், அவற்றின்பின்னுள்ள ௧௮0 - பாக்கள் மணிமிடைபவளமெனவும், மற்றைய நூறுபாக்கள் நித்திலக்கோவையெனவும் கூறப்படும். இத்தொகை தொகுத்தான், மதுரை உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன். தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. இத்தொகை அகமெனவும், அகப்பாட்டெனவும், நெடுந்தொகையெனவும் கூறப்படும். இது பொருளாற் றொகுக்கப் பட்டது.

புறநானூற்றின் வரலாற்றிற்கு, அங்கமாக நற்றிணைமுதலிய எழுதொகைகளின் வரலாறுகள் இதுவரையிற் கூறப்பட்டன.

௮. புறநானூறு:—இது கடவுள்வாழ்த்துச்செய்யுள் முதலிய ௪00 - அகவற்பாக்களையுடையது. அப்பாக்களுள் முதற்செய்யுளாகிய கடவுள்வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாராலும், மற்றை ௩௯௯ - பாக்களும் முரஞ்சியூர் முடிநாகராயர்முதல கோவூர்கிழாரீறாகவுள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டுள்ளன. இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரின்னாரென்று விளங்கவில்லை. இந்நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமை பெருமையுந் தெரியவில்லை. இது புறப்பாட்டெனவும், புறமெனவும் வழங்கும். இது பொருளாற் றொகுக்கப்பட்டது. இங்கே பொருளென்றது, அகம் புறமென்னுமிரண்டனுள் புறத்தை.

அகமாவது ஒத்தஅன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முட் கூடுகின்றகாலத்துப் பிறந்த அக்கூட்டத்தின்பின்பு அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப்புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அநுபவிக்கப்படும் இன்பம்; இன்பம்பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை அகமென்றது ஆகுபெயர்; அகம் - உள். புறமாவது மேற்கூறிய ஒத்தஅன்புடையாரானேயன்றி எல்லாராலும் அநுபவித்துணரப்பட்டு இஃது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள்;

அஃது அறனும் பொருளும்; அறனும் பொருளும்பற்றிப் புறத்தே நிகழு மொழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர்; புறம் - வெளி.

இந்நூல், மேற்கூறிய புறத்தின்பகுதியாகிய வெட்சி முதலியு திணைகளுக்குரிய துறைப்பொருளமைந்த ௪00 - பாக்களையுடைமையின் புறநானூறென்று பெயர் பெற்றது. வெட்சிமுதலிய திணைகளாவன :— வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணையென்பன. திணை - ஒழுக்கம். துறை - மக்களும் விலங்குகள்முதலியனவும் சென்று நீருண்ணுந் துறைபோலப் பலவகைப்பட்டபொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதற்குரிய வழி. இந்தப்பகுதியிலுள்ள திணை துறைகளின் விவரணங்களைப் பின்னர்ச்சேர்க்கப்பட்டுள்ள திணைவிளக்கத்திலும் துறைவிளக்கத்திலும் முறையே காண்க.

இந்நூலால், பண்டைக்காலத்துஇத்தமிழ்நாட்டிலிருந்த சேர சோழபாண்டியர்களாகிய முடியுடைவேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரரென்கிற பலருடைய சரித்திரங்களும், கடையெழுவள்ளல்களின் சரித்திரங்களும், கடைச்சங்கப்புலவருடைய சரித்திரங்களும், அக்காலத்துள்ளாருடைய நடைமுதலியனவும் பின்னும்பற்பலவும் நன்குபுலப்படும். இந்நூற்செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள் ஒருகாலத்தாரல்லர்; ஒருகுலத்தாரல்லர்; ஒருசாதியாரல்லர், ஓரிடத்தாருமல்லர். பாடியவர்களும் இத்தன்மையரே. இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர். பாடியவர்களுள் பெண்பாலாருமுளர்.

முன்னோரிடையே யிந்நா டாண்ட, காவலர் பல்லோர் பாவலர் பல்லோர், மாசரி தத்தை யாசற விளக்கிச், சொற்சுவை பொருட்சுவை துவன்றியெஞ் ஞான்று, மொப்புமை யில்லாத் திப்பிய நடையுடைத், திறப்பா டமைந்தவிப் புறப்பாட் டுக்கள், தெய்வ வணக்கஞ் செய்யுமி னென்பவும், அறத்தின் பகுதியை உறத்தெரிப் பனவும், பாவ வழியை நீவனன் றென்பவும், இம்மைப் பயனொடு மறுமைப் பயனைச், செம்மையின் வகுத்துத் தெரிவிப் பனவும், அந்தண ரியல்பைத் தந்துரைப் பனவும், அரச நீதியை யுரைசெய் வனவும், வணிக ரியல்பைத் துணிவுறுப் பனவும், வேளாண் மாக்களின் றாளாண் மையினை, யியம்பு வனவும் வயம்புரி போர்க்கு, முந்துறு மரசரைச் சந்து செய் வனவும், ஒற்றுமைப் பயனைச் சொற்றிடு வனவும், வீரச் சிறப்பை யாரத் தெரிப்பவும், இல்லற மாகிய நல்லற முரைப்பவுந், துற

வற மதனைத் திறவிதிற் றெரிப்பவு, மிடித்துன் பத்தை யெடுத்துரைப்
பனவும், வண்மையுந் தண்மையு முண்மையுந் திண்மையு, மென்னு
மிவற்றைப் பன்னு வனவும், அளியையு மொளியையுந் தெளிவுறுப்
பனவுந், தம்மைப் புரந்தோர் தாமாய்ந் திடவே, புலவர்கள் புலம்பி
யலமா றெரிப்பவு, நட்பின் பயனை நன்கியம் புநவுங், கல்விப் பயனைக்
கட்டுரைப் பனவும், நீர்நிலை பெருக்கென நிகழ்த்து வனவு, மானந்
தன்னைத் தாநன் குரைப்பவும், இளமையும் யாக்கையும் வளமையு
நிலையா, வென்றே யிசைத்து நன்றேய்ப் பனவும், அருளுடைமை
யினை மருளறத் தெரிப்பவுந், தாமறின் றொழுகென் றாணுற விதிப்ப
வும், அவாவின் கேடே தவாவின் பென்பவும், இனியவை கூற னனி
நல னென்பவும், உழவின் பெருமையை யழகுற வுரைப்பவு, நன்றி
யறிக வென்றிசைப் பனவுங், கொடுங்கோன் மையினை விடுங்கோ
ளென்பவுந், தவத்தின் பெருமையைத் தவப்பகர் வனவு, மடியெனும்
பிணியைக் கடிமி னென்பவுங், கொலையெனும் பகையைத் தொலைமி
னென்பவும், நல்லோர்ப் புணர்ந்து புல்லோர்த் தணந்து, தாழ்வொன்
றின்றி வாழ்மி னென்பவுஞ், சுற்றம் புரக்கு நற்றிற முரைப்பவுங், கற்
பின் றிறத்தைக் கற்பிப் பனவு, மக்கட் பேற்றின் மாண்புரைப் பன
வுங், கணவனை யிழந்த மணமலி கூந்த, றீப்பாய் செய்தி தெரிவிப்
பனவுங், கைம்மை விரத வெம்மை விரிப்பவும், இன்னும் பற்பல
பன்னு வனவுமாய்ச், செப்புந ரெவர்க்கு மெய்ப்பிடை வைப்பாய்,
அரும்பெறன் மரபிற் பெரும்பயன் றருமே - என்று ஒருவாறு பொ
துப்படத் தொகுத்துக்கூறுவதன்றி இன்னபாடல் இத்தன்மையது
இன்னபாடல் இத்தன்மையதென்று தனித்தனியே யெடுத்துக்காட்டி
இவற்றின் அருமை பெருமைகளைச் சீராட்டிப் பாராட்டுதற்கு ஒரு
சிறிதும் வல்லேனல்லேன்.

இவை நூலாசிரியர் பலருடைய உள்ளத்தையும் உரையாசிரியர்
பலருடைய உள்ளத்தையும் தம்வசமாக்கி அவற்றைத் தமக்கு முழு
மணிப்பீடிகையாகக் கொண்டு வீற்றிருந்தன வென்பதை, அவரவ
ரருளிச்செய்த நூல்களும் உரைகளும் இவற்றின் சொன்னடை பொரு
ணடைகளை இடையிடையே பெரும்பாலுந் தழுவியிருத்தலே நன்கு
புலப்படுத்தும்.

இந்நூற்குக்கிடைத்தவுரை, பதப்பொருளை இனிதுவிளக்கி உரிய
இடங்களிற் சொற்களைமுடித்துக்காட்டி இலக்கணக்குறிப்பையும்
திணை துறைகளையும் ஆங்காங்குள்ள பழமொழிகளையும் அணியையும்
சொன்னயம் பொருணயங்களையும் நன்குபுலப்படுத்துவது; இவ்

வுரை, இந்நூலின் முதல் இருநூற்றறுபத்தாறு பாடல்களுக்குமட்டுமே கிடைத்தது, மேலுள்ள பாடல்களுக்கு ஒருபிரதியிலும் கிடைத்திலது; இவ்வுரையாசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. இவர் சில பாடல்களின் விசேடவுரையில் எழுதும் மறுப்புக்கள், இந்நூற்குப் பழையவுரை ஒன்றிருந்ததென்பதைக் குறிப்பிக்கின்றன. அவ்வுரை இப்பொழுது கிடைக்கவில்லை.

இந்நூற்கு இலக்கணம் அகத்தியமுந் தொல்காப்பியமுமே யென்பதும், இதில் ஒவ்வொருபாட்டின் பின்னும் எழுதப்பட்டுள்ள திணையுந்துறையும் அவ்வப்பாட்டிற்கேற்றன வல்லவென்பதும் நச்சினார்க்கினியர் கருத்து; அவர் கருத்து அன்னதாதல், 'தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறைகூறினாரேனும் அகத்தியமுந் தொல்காப்பியமுமே தொகைகட்கு நூலாகலின் அவற்சூத்திரப் பொருளாகத் துறைகூறவேண்டுமென்றறிக' என்று தொல்காப்பியப்புறத்திணையியலில் "கொடுப்போ ரேத்தி" என்னுஞ் சூத்திரவுரையில் அவரெழுதியிருத்தலானும், மேற்கூறிய புறத்திணையியலுரையில் இந்நூற்பாட்டுக்களுட் சிலவற்றை வேறு திணைதுறைகளுக்கு உதாரணமாகக்காட்டி அவர் மறுத்தலானும் துணியப்படும்.

இத்தமிழ்நாட்டின் பழையசரித்திரங்களைத் தெரிந்துகொள்ளுதலிலும் தெரிவித்தலிலுமே பெரும்பாலும் காலங்கழித்து உழைத்துவரும் உபகாரிகளாகிய விவேகிகள், இந்நூலை நன்கு ஆராய்ச்சிசெய்வார்களாயின் இதனால் பலர்வரலாறுகள் முதலியன தெரிந்துகொள்ளுதல்கூடும்.

இந்நூலுரையாசிரியர் மேற்கோளாக எடுத்துக்காட்டிய நூல்கள் :-

இலக்கணம் ...	தொல்காப்பியம்.	
இலக்கியம் ..	க. கலித்தொகை.	ங. சீவகசிந்தாமணி.
	உ. குறுந்தொகை.	ச. பெரும்பாணாற்றுப்படை.

நூதனமாக எழுதிய இந்நூலுரைக்குறிப்பில், மறதி முதலியவற்றால் எழுதவேண்டியவைகள் எழுதப்படாமலும் வேண்டாதவைகள் எழுதப்பட்டும் இருத்தல்கூடும்; விவேகிகள் இக்குற்றத்தைப் பொறுப்பார்களென்று நம்புகிறேன்.

சில இடையூற்றால் இப்பகுதியைக் குறித்தகாலத்தில் வெளிப்படுத்தக் கூடாமற் போயிற்று.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.
(1911)

பாடினோர் வரலாறு.

[புறநானூற்றில் ௧0௧ - முதல் ௧௨௫ - இறுதியாகிய செய்யுட்களைப் பாடிய ஆசிரியர்கள் வரலாறு :—]

ஔவையார்.—இவர் அதிகமானெடுமானஞ்சியிடம் அமுதமயமாகிய நெல்லிக்கனிபெற்று அவனைப் புகழ்ந்தார்; இஃது, இந்நூல் ௯௧ - ம்பாட்டினாலும், ௧00 - ம் திருக்குறளின் விசேடவுரையில் 'இனியகனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனிபோல் அமிழ்தாவனவற்றை' என்று பரிமேலழகரெழுதியதனாலும் வெளியாகின்றது. இவராற்பாடப்பட்டோர் அதிகமானெடுமானஞ்சி, அதிகமான்மகன் பொகுட்டெழினி, தொண்டைமான், நாஞ்சில்வள்ளுவன், சேரமான்மாவெண்கோ, பாண்டியன்கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி யென்பார். இன்னும் இவரியற்றிய பாடல்கள் நற்றிணையிலும் குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் தொல்காப்பியவுரையிலும் யாப்பருங்கலவிருத்தியுரை முதலியவற்றிலும் காணப்படுகின்றன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை முதலியன இவரால் இயற்றப்பட்ட நூல்கள். இவர் அவ்வச்சமயத்துச் செய்தனவாக உள்ள தனிப்பாடல்கள் மிகப் பல. இவர்பெயர் ஔவையெனவும் வழங்கும். இவரியற்றிய செய்யுளினெண்கள் : ௧0௧, ௧0௨, ௧0௩, ௧0௪.

கபிலர்.—இவர் அந்தணர்; வேள்பாரியின் நண்பர்; அவன் இறந்த பின்பு அவன்மகளிரை அழைத்துச்சென்று மணஞ்செய்துகொள்ளும்படி விச்சிக்கோன், இருங்கோவேளென்பவர்களை வேண்டி அவர்கள்மறுத்தது கண்டு வெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப்பார்ப்படுத்துத் தம்கடனைக் கழித்தனர்; இதனை, இந்நூல் ௨00-ம் செய்யுள் முதலியவற்றாலுணர்க. எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றில் குறிஞ்சியைப்பொருளாகவுடைய மூன்றாம்நூறு இயற்றியவர் இவரே; இதனை, "மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன், கருதுங் குறிஞ்சி கபிலர்" என்னும் பழையவெண்பாவாலுணர்க. அவ்வெட்டுத்தொகையுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தைப் பாடிச் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனிடம் நூறாயிரங்காணமும் அவன் ஒரு மலைமீதேறிக் கண்டு கொடுத்த நாடும் பரிசிலாகப்பெற்றனர்; இஃது அப்பதிற்றுப்பத்துரையாற் புலப்படுகின்றது. இன்னும் இவரியற்றியபாடல்கள் நற்றிணையிலும் குறுந்தொகையிலும் அகநானூற்றிலும் காணப்படுகின்றன. பத்துப்பாட்டினுளொன்றாகிய பெருங்குறிஞ்சி என்று வழங்கும் குறிஞ்சிப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய இன்னாநாற்பதும் இவரருளிச்செய்தனவே. இலக்கணவுரைகளில் 'கபிலபரணர்' என்று உரையாசிரியர்கள் உதாரணங்காட்டியிருப்பதை உற்றுநோக்குமிடத்து, இவர் பரணர்பால் மிக்கநேயமுடையவரென்றும் பெரும்பாலும் அவருடனிருப்பவ

பாடினோர் வரலாறு.

ரென்றும் சொல்லுதற்கிடமுண்டு. இவரால் பாடப்பட்டோர் (சேரமான் கடுங்கோவாழியாதன் —சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன், வேள் பாரி, அதுறை, மலையமான் திருமுடிக்காரி, வையாவிக்கோபபெரும்பேகன், விச்சிக்கோன், இருங்கோவேளென்பார். இவர் அவ்வச்சமயத்திற் கூறிய பாடல்கள் மிகவும் வியக்கத்தக்கவை. இந்நூலில் (௫௩-ம் பாடல்) "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனப் பொருந்திலிளங்கீரனாராலும், (௧௨௬-ம் பாடல்) "புலனழுக் கற்ற அந்தணாளன்", (௧௭௪-ம் பாடல்) "பொய்யா நாவிற் கபிலன்" என மாறோக்கத்து நப்பசலையாராலும் இவர் புகழப்பட்டிருக்கின்றனர். திருவள்ளுவமாலையிலுள்ள "திணையளவு போதா" என்னும் ௮-ம் பாடல் இவராற்செய்யப்பட்டதாகத் தெரிகின்றமையின், கடைச்சங்கத்திருந்து தமிழ்நாவலர் சரிதை கூறப்படுவர். இவர் வேறு, தொல்கபிலரென்பார் வேறு. இவரியற்றிய பாடல்களின் எண்கள் - ௧0௫, ௧0௬, ௧0௭, ௧0௮, ௧0௯, ௧௧0, ௧௧௧, ௧௧௩, ௧௧௪, ௧௧௫, ௧௧௬, ௧௧௭, ௧௧௮, ௧௨0, ௧௨௧, ௧௨௨, ௧௨௩, ௧௨௪.

பாரிமகளிர்.—இவர்கள் பாரியென்னும் வள்ளலுடைய புதல்வியர். இவர்களுள் ஒருத்தி மழையில்லாத வறட்காலத்தில் இரந்துவந்த பாணனொருவனை உண்பித்தற்குச் சோறுபெறாமையாற் பொன்னை உலையிற்பெய்து சோறாக்கிக்கொடுத்தனள்; இது, பழமொழியில் "மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்துப், பாரி மடமகள் பாண்மகற்கு - நீருலையுட், பொன்றந்து கொண்டு புகாவாக நல்கினாள், ஒன்றுறா முன்றிலோ வில்" என்னும் ௧௭௧-ம் வெண்பாவால் விளங்குகின்றது. இவர்கள் தமது தந்தை யிறந்த பின்பு பிரிவாற்றாது வருந்திப் புலம்பிப் பாடினர். அப்பால் தமது தந்தையின் தோழராகிய கபிலரால் பார்ப்பார்க்கு மணஞ்செய்துகொடுக்கப்பட்டார்கள். இவர்களியற்றிய பாடலின் எண், ௧௧௨.

வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.—இவரால் பாடப்பட்டோன் தேர்வண்மலையன். இவர்பெயர் வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனாரென்றும் கையெழுத்துப் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவரியற்றிய பாடலின் எண், ௧௨௫.

பாடப்பட்டோர் வரலாறு.

[புறநானூற்றில் க௦க - முதல் க௨௫ - இறுதியாகிய செய்யுட்களில் வந்துள்ள அரசர்முதலியோர் வரலாறு :—]

அதிகமான்நெடுமானஞ்சி :—இவன் கடையெழுவள்ளல்களிலொருவன்; யுத்தத்திற் பேர்பெற்றவீரன். ஒருவகைவீரர்களாகிய மழவர்களுக்குத் தலைவன்; ஒருகாலத்தில், உண்டோர்க்கு நெடுங்காலஞ்சீவித்திருத்தலைச்செய்யும் கருநெல்லிப்பழமொன்றைப்பெற்று அதனை ஒளவைக்குக்கொடுத்துப் புகழ்பெற்றவன்; காஞ்சிநகரத்திருந்த தொண்டைமானென்னுமரசனிடம் ஒளவையைத் தூதுவிடுத்தோன்; சேரமானுடைய உறவினன்; பனைமாலையையுடையவன்; வெட்சிப்பூவையும் வேங்கைப்பூவையுமணிவோன்; சேரன், சோழன், திதியன், எருமையூரன், இருங்கோவேண்மான், பாண்டியன், பொருநனென்னும் அரசரெழுவர்க்குரிய எழிலொருசனையும் நாடும் அரசவுரிமையுமாகிய இவற்றையுடையோன் மேற்கூறிய அரசரெழுவரோடு பகைத்து மேற்சென்று அவரைப் போரில்வென்றோன்; பரணர்புகழ்ந்துபாடும்படி கோவலூரையும்வென்றோன். இவனுடையவூர் தகடூர். இவன்மலை குதிரைமலை. இவன்மகன் பொகுட்டெழினி; இவன்முன்னோர், தேவர்களைப்போற்றிவழிபட்டு விண்ணுலகிலிருந்து கரும்பை இவ்வுலகிற் கொணர்ந்தனர். இவன் பெயர் அதியமானெனவும், அதியமானெடுமானஞ்சியெனவும், நெடுமானஞ்சியெனவும், அஞ்சியெனவும் வழங்கும். இவன் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டானென்று பதிற்றுப்பத்து எட்டாம்பத்தினால் விளங்குகின்றது. 'ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும்இருப்பின் அஃது உழிஞையினடங்கும்; அது சேரமான்செல்வுழித் தகடூரிடை அதிகமானிருந்ததாம்' என்பது தொல்காப்பியம், புறத்திணையியல், எ - ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரை. இவனைப்பாடியபுலவர்கள் : ஒளவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார் செய்யுளினெண் - க௦க, க௦௩, க௦௪.

அதிகமான்மகன்பொகுட்டெழினி :—இவன், கொடையும் இன்பச்சிறப்பும் வென்றிச்சிறப்புமுடையோன்; இவன்பெயர் அதியமானெடுமானஞ்சி மகன்பொகுட்டெழினியெனவும் வழங்கும்; இவனைப்பாடியவர் ஒளவையார். க௦௨.

சேரமான்மாந்தரஞ்சேரலிரும்பொறை :—இவன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர்செய்தான். இவன்காலத்துப்புலவர்கள் : பொருந்திலிளங்கீரனார், வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனார். க௨௫.

சோழன்இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளி :—இவன் யுத்தத்தில் வல்லவன்; தேர்வண்மலையனென்பவனைத் துணையாகக்கொண்டு சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையோடு பொருது அவனை வென்றான். சேரமான் மாவெண்கோவோடும் பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியோடும் நட்புடையோன். இவனைப் பாடிய புலவர்கள் : பாண்டரங்கண்ணனார், ஒளவையார், உலோச்சனார். இவன்காலத்துப் புலவர் வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனார். க௨௫.

தேர்வண்மலையன் :—இவன் சிறந்தவீரன் ; சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குத் துணையாய் நின்று சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையை வென்றான். இவனைப்பாடிய புலவர் வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் கஉரு.

மலையமான்திருமுடிக்காரி :—இவன் பெண்ணையாற்றங் கரையின்கணுள்ள மலாடென்று வழங்கும் மலையமானாட்டின் அரசன். கோவலூர் இவனது இராசதானி. தமிழ்நாட்டரசர் மூவர்க்கும் ஒவ்வொருசமயத்து யுத்தத்திலுதவி புரிந்தவன், புலவர்க்குப் பரமோபகாரி; முள்ளூர் மலையை யுடையான். அந்தணர்க்கு நிலங்கொடுத்தோன். கடையெழுவள்ளல்களிலொருவனென்று கூறப்படும் மலையனிவனே. இவன்குதிரைக்குக் காரி யென்று பெயர். கடையெழுவள்ளல்களிலொருவனாகிய ஓரியென்பவனோடு போர்செய்தவன்; இதனை, [அடி கக0 - ககங] "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, வோரிக் குதிரை யோரியும்" என்னும் சிறுபாணாற்றுப்படையா லுணர்க. இன்னும், "துஞ்சா முழவிற் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கா முன்றுறைப், பெண்ணையம் பேர்யாற்று நுணங்கறல் கடுக்கு,நெறியிருங் கதுப்பினின் பேதைக்கு" எனவும், "முரண்கொடுப்பிற் செவ்வேன் மலையன், முள்ளூர்க் கானம்" எனவும், "ஓடா மலையன் வேலிற், கடிதின் மின்னுமிக் கார்" எனவும், "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப், பலருடன் கழித்தவாண் மலையனொருவேற், கோடியாங்கு" எனவும் அகநானூறு முதலியவற்றிற் சான்றோர் இவனைப்பாராட்டியிருத்தல்காண்க. இவன்பெயர் மலையமானெனவும், காரியெனவும், மலையனெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர்கள் :—கபிலர், மாறோக்கத்து நப்பசலையார். கஉக, கஉஉ, கஉங, கஉச.

வேள்பாரி : — இவன் கடையெழுவள்ளல்களிலொருவன் ; முந்நூறூரையுடைய பறம்புநாட்டிற்கும் பறம்புமலைக்கும் தலைவன். முல்லைக்கொடிக்குத் தேர்கொடுத்தோன் ; இதனை, [அடி அஎ - கூக] "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரி" என்னும் சிறுபாணாற்றுப்படையா லுணர்க. தன்னுடைய முந்நூறூரையும் மற்றைப் பொருள்களெல்லாவற்றையும் பரிசிலர்க்குக்கொடுத்தோன் ; மிக்க பராக்கிரமமுடையவன். இவனைவெல்லக்கருதிய தமிழ்நாட்டு வேந்தர்மூவரும் போரில் வெல்லவொண்ணாமையின் வஞ்சித்துக்கொன்றனர். இவன் இறந்தபின்பு இவன்நண்பராகிய கபிலர் சென்று இவன்மகளிரை மணஞ்செய்துகொள்ளும்படி விச்சிக்கோனையும், இருங்கோவேளையும் வேண்டி, அவர்மறுப்ப, அப்பால் அம்மகளிரைப் பார்ப்பார்க்கு மணம்புரிவித்தனர். இவனைப்பற்றிப் பலவாறாக அவ்வச்சமயங்களிற் கபிலர்பாடிய செய்யுட்களை யொன்றிப் படிப்பின் யாரும் மனமுருகாதிரார். சைவசமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் 'கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங்கொடுப்பாரிலை" என்று அருளிச்செய்திருத்தலின், இவன் காலம் அவர்காலத்துக்கு முந்தியதாகல்வேண்டும். இவன்மலைச்சுனை, புலவர் பலராலும் புகழப்பட்டுள்ளது. இவன்பெயர் பாரியெனவும்வழங்கும். இவன் இறந்தபின்பும் இருந்த புலவர் புறத்திணைநன்னாகனார். க0ரு, க0சு, க0எ, க0அ, க0கூ, ககக, ககரு, ககசு, ககஎ, ககஅ, ககூ, கஉ0.

புறநானூறு

மூலமும் உரையும்.

(க0க - கஉரு.)

(க0க.) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினுந்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ
வணிபூ ணணிந்த யானை யியறே
ரதிகமான் பரிசில் பெறூஉங் கால
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
யருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

அதிகமானை ஔவையார் பாடியது.

இதன்பொருள்.—ஒரு நாள் செல்லலம் - யாம் ஒரு நாள் செல்லேம்; இரு நாள் செல்லலம் - இரண்டுநாள்செல்லேம்; பல நாள் பயின்று பலரொடு செல்லினும் - பலநாளும் நெருங்கிப் பலரோடுகூடச் செல்வேமாயினும், தலை நாள் போன்ற விருப்பினன் - முதற்சென்றநாள்போன்ற விருப்பத்தையுடையன்; அணி பூண் அணிந்த யானை - அணிகலமணிந்த யானையையும், இயல் தேர் - இயன்ற தேரையுமுடைய, அதிகமான்—, பரிசில் பெறூஉம் காலம் - பரிசிலைப் பெறுங் காலமானது, நீட்டினும் நீட்டாதாயினும் - நீட்டிப்பினும் நீட்டியாதொழியினும், யானை தன் கோடு இடை வைத்த கவளம் போல - யானையானது தன்னுடைய கொம்பினிடத்தே வைக்கப்பட்ட கவளத்தைப்போல, கை அகத்தது அது - நமது கையகத்தது அப்பரிசில்; பொய்யாகாது - அது தப்பாது; அருந்த ஏமாந்த நெஞ்சம் - உண்ண ஆசைப்பட்ட நெஞ்சே! வருந்த வேண்டா - நீ பரிசிற்கு வருந்தவேண்டா; அவன் தாள் வாழ்க - அவனுடைய தாள் வாழ்வதாக.— என்றவாறு.

அதிகமான்விருப்பினனென முன்னேகூட்டுக. கோட்டிடைவைத்தகவளம்போலவென்றதற்கு யானை வாயிற்கொண்டு நுகருமளவும் கோட்டிடை வைத்தகவளம்போலப் பரிசில் கையகத்தது வென்க; அன்றிக் களிறு கோட்

டிடைவைத்தகலத்தைச் சிறிதுதாழ்த்ததாயினும் அஃது அதற்குத்தப்பாத வாறுபோலப் பரிசில் சிறிது தாழ்ப்பினும் நமக்குத்தருதல் தப்பாதென்ப தாக்கி உரைப்பினு மமையும்.

தாளை முயற்சியென்பாரும் உளர். அருந்தவென்பது, அருந்தெனக் கடைக்குறைக்கப்பட்டது; அருந்தென முன்னிலையேவலாக்கி உரைப்பினு மமையும்.

குறிப்பு.—செல்லலமிரண்டையும் எச்சமாக்கினும் பொருந்தும். மாது ஓ இரண்டும் - அசைநிலை. பரிசில், சன்மானம், பேறு என்பன - ஒருபொருட் சொற்கள். நெஞ்சம் - விளி. வாழ்க - விகாரம் 'தாள்வாழ்க' என்றல் மரபு; ௧௦௫ - "புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே", ௧௭௪ - "வாழ்வோர் வாழவ வன் றாள்வா ழியவே" என இந்நூலிலும், "நாதன்றாள் வாழ்க" எனத் திரு வாசகத்திலும் வந்திருத்தல் காண்க. 'வாழ்கவவன்றாளே' எனவும் பாடம்.

(௧௦௨.) எருதே யிளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
யவலிழியினு மிசையேறினு
மவண தறியுநர் யாரென வுமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
விசைவிளங்கு கவிகை நெடியோய் திங்க
ணாணிறை மதியத் தனையையிருள்
யாவண தோநின் னிழல்வாழ் வோர்க்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவன்மகன் பொகுட்டெழினியை அவர் பாடியது.

இ-ள்.— இளைய எருது நுகம் உணரா - இளைய எருதுகளானவை நுகம்பூணுதலை மதியா; சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே - வண்டியானது உப்பாகிய பண்டம் பெரிதாக இடப்பட்டது; ஆதலால், அவல் இழியினும் - அவ்வண்டி பள்ளத்தே இறங்கினாலும், மிசை ஏறினும் - மேட்டிலே ஏறினாலும், அவணது அறியுநர் யாரென - அவ்விடத்துவரும் இடையூற்றை அறிவார் யார்தானென்றுநினைத்து, உமணர் கீழ்மரத்து யாத்த - உப்புவாணிகர் அச்சுமரத்தின்கண்ணே அடுத்துக் கட்டப்பட்ட, சேம அச்சு அன்ன - சேமவச்சுப்போன்ற, இசை விளங்கு கவி கை நெடியோய் - புகழ்விளங்கிய இடக்கவிந்த கையையுடைய உயர்ந்தோய்! திங்கள் நாள் நிறை மதியத்து அனையை - நீ திங்களாகிய நாள்நிறைந்த மதியத்தை யொப்பை; ஆகலின், நின் நிழல் வாழ்வோர்க்கு இருள் யாவணது - நின்னிழற்கண் வாழுமவர்களுக்குத் துன்பமாகிய இருள் எவ்விடத்துள்ளது.—எ-று.

திங்கள்நாணிறைமதியத்தனையை யென்றது, அறிவும் நிறைவும் அருளு முதலாகிய குணங்களால் அமைந்தா யென்றவாறும். சேமவச்சன்னவென்

றது, ஏற்றிழிவுடையவழி அச்சுமுறிந்துழிச் சேமவச்சு உதவினாற்போல நீகாக்கின்றநாட்டிற்கு ஓரிடையூறு உற்றால் அதுநீக்கிக் காத்தற்குரியையென்பதாம். 'எருதே யிளைய நுகமுண ராவே, சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே' என்பது உவமங்கருதாது சகடத்திற்குவரும் ஏதங்குறித்து உமணர் சேமவச்சுயாத்தற்குக் காரணமாய்நின்றது.

கு-பு. பின்பு உமணரென்றதனால், பண்டம் - உப்பாயிற்று. சேமவச்சு - காவலாகியஅச்சு. "தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை" (மலைபடுகடாம், ௩௯௯-ம் அடி) என்பதில் 'கவிகை' என்பதற்குப் பொருள், 'கொடுத்துக்கவிந்தகை' என்று செய்யப்பட்டிருக்கிறது. அன்ன நெடியோயெனக. இங்கே அறிவுமுதலியவற்றானிறைந்த பொருட்டெழினி கூறப்பட்டிருத்தல்போலச் சிந்தாமணி கோவிந்தையாரிலம்பகத்தில் "யாள்வாய்" என்னும் ௯-ம் கவியில், "நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான்" எனச் சீவகனும், சிறுபாணாற்றுப்படையில், "பன்மீனுப்பட் பான்மதி போல, வின்னகை யாயமொ டிருந்தோற் குறுகி" என நல்லியக்கோடனும் கூறப்பட்டிருத்தல்காண்க. அமைந்தாய் - நிறைந்தோனே. ஏற்றிழிவு - ஏறுதலிறங்குதல். ஏதம் - துன்பம். மதிக்குமுன்பு இருள்நில்லாதவாறுபோல உனக்குமுன்னர்த் துன்பம் நில்லாதென்றபடி. (௧0௨)

(௧0௩.) ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன்முத லிருந்த சில்வளை விறலி
செல்வை யாயிற் சேணோ னல்லன்
முனைசுட வெழுந்த மங்குன் மாப்புகை
மலைசூழ் மஞ்சின் மழகளி றணியும்
பகைப்புலத் தோனே பல்வே லஞ்சி
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் லடையிற் கொழுநிணம் பெருப்ப
*வலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே.

திணை - அது; துறை - விறலியாற்றுப்படை.
அதிகமான்நெடுமானஞ்சியை அவர் பாடியது.

இ-ள். — ஒருதலை பதலை தூங்க - காவினது ஒருதலைக்கண்ணே பதலை தூங்க, ஒருதலை தூம்பு அகம் சிறுமுழா தூங்க தூக்கி - ஒருதலைக்கண்ணே துளையை அகத்தேயுடைய சிறியமுழாவைத் தூங்கும்பரிசு தூக்கி, கவிழ்ந்த மண்டை - இடுவோரின்மையின் ஏலாதுகவிழ்ந்த என்மண்

* வறத்தற்காலையென்றும் பாடம்.

டையை, மலர்க்குநர் யார் என - இட்டுமலர்த்தவல்லார் யாரெனச்சொல்லி, **சுரன் முதல்** இருந்த சில்வளை விறலி - சுரத்திடத்தேயிருந்த சிலவாகிய வளையையுடைய விறலி! செல்வையாயின் - நீ அவன்பாற் போவாயாயின், சேணோன் அல்லன் - அவன் சேய்மைக்கண்ணானல்லன்; முனை சுட எழுந்த மங்குல் மாப்புகை - முனைப்புலத்தைச் சுடுதலாலெழுந்த இருட்சியையுடைய கரிய புகை, மலை சூழ் மஞ்சின் - மலையைச்சூழுமுகில்போல, மழ களிறு அணியும் - இளங்களிற்றைச்சூழும், பகைப்புலத்தோனே பல் வேல் அஞ்சி - பகைவர்தேயத்திருந்தான் பலவேற்படையையுடைய அதிகமான்; பொழுது இடைப்படா புலரா மண்டை - ஒருபொழுதும் ஓயாமல் உண்ணவும் தின்னவும்படுதலால் ஈரம்புலராத மண்டை, மெழுகு மெல் அடையின் கொழுநிணம் பெருப்ப - மெழுகானியன்ற மெல்லிய அடைபோலக் கொழுத்தநிணம் மிக, அலத்தல் காலை ஆயினும் - உலகம் வறுமையுறுதலையுடைய காலமாயினும், புரத்தல் வல்லன் - பாதுகாத்தலைவல்லன்; அவன் தாள் வாழ்க - அவனுடைய தாள் வாழ்க.—எ - று.

பதலையென்பது, ஒருதலைமுகமுடையதோர் தோற்கருவி. பகைப்புலத்தோனென்றகருத்து, பகைவர்பால் திறைகொண்டபொருளுடையனாதலின், நீவேண்டியவெல்லாந்தருதல் அவனுக்கு எளிதென்பதாம். சேணோனல்லனென்பதற்கு - பரிசில் நீட்டிப்பானல்லனென்று உரைப்பினுமமையும். உம்மை - சிறப்பு.

கு - பு. கா - தோட்சுமை. ஒருதலை - ஒருபக்கம். தூங்க - தொங்க. அகம் - உள். முழா - மத்தளம். பரிசு - விதம். மண்டை - ஏற்கும்பாத்திரம். மலர்த்தல் - வாய்மேலாகப்பிடிக்கச்செய்தல. விறலி - விளிப்பெயர்; விறல்படப்பாடியாடுபவளென்பது பொருள். சேய்மை - தூரம். முனைப்புலம் - பகைவருறையுமிடம். பகைமேற்சென்றோர் பகைவருடைய நாட்டிலுள்ள ஊர்களைச்சுடுதல் மரபு; இதனை, இந்நூலில் "வடாஅது" என்னும் ௬ - ம் பாட்டிலுள்ள "வாடுக விறைவநின் கண்ணி யொன்னார், நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே" என்பதனாலும், "களிறு கடைஇய" என்னும் எ - ம் பாட்டிலுள்ள "நாடுசுடு விளக்கத் தழூஉவிளிக் கம்பலை" என்பதனாலும், "வினைமாட்சிய" என்னும க௬ - ம் பாட்டிலுள்ள "எமநன்று டொள்ளெரி யூட்டினை" என்பதனாலும், "வெளிறில் நோன்காழ்" என்னும் உ௩ - ம் பாட்டிலுள்ள "நெடுநகர், வினைபுனை நல்லில் வெவ்வெரி யினைப்ப" என்பதனாலும், "வல்லா ராயினும்" என்னும் ருஎ - ம் பாட்டிலுள்ள "நனந்தலைப் பேரூ ரெரியு நக்க" என்பதனாலும், மதுரைக்காஞ்சியிலுள்ள (கஉ௬-கஉஎ-ம் அடிகள்) "காலெனக் கடிதுராய், நாடுகெட வெரிபரப்பி" என்பதனாலு முணர்க; இது, 'எரிபரந்தெடுத்தல்' என்னுந்துறையென்பர் ஆசிரியர் தொல்காப்பியர்; [தொல் - பொரு - புறத்திணையியல், அ - ம் சூ.] மண்டை நிணம்பெருப்பப் புரத்தல் வல்லனென இயைக்க. அடை - நிணத்திற்குவமம். விறலி புலாலுண்பவளாதலின், இங்ஙனம் கூறினர். திறைப்பொருளை அரசர்

இரவலர்க்கு அளித்தலை, “வேந்து தந்த பணிதிறையாற், சேர்ந்தவர் கடும் பார்த்து, ஓங்கு கொல்லியோர் அடுபொருந” என்னும் இந்நூல் ௨௨-ம் செய்யுளாலுணர்க. உம்மை - ‘ஆயினும்’ என்பதிலுள்ளது. ‘வாழ்க வவன் றாளே’ எனவும் பாடம். (௧௦௩)

(௧௦௪.) போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை
யூர்க்குறு மாக்க ளாடக் கலங்குந்
தாட்படு சின்னீர்க் களிறட் டுவீழ்க்கு
மீர்ப்புடைக் கராஅத் தன்ன *வென்னை
௫ நுண்பல கருமம் நினையா
திளையனென் றிகழிற் பெறலரி தாடே.

திணை - வாகை; துறை - அரசவாகை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—போற்றுமின் மறவீர் - நீங்கள் பாதுகாமின் மறவீர், நும்மை சாற்றுதும் - நுமக்கு யாங்கள் அறிவிப்பேம்; ஊர் குறுமாக்கள் ஆட கலங்கும் தாள் படு சில் நீர் - ஊரின்கணுள்ள இளம்புதல்வராடுதலாற் கலங்குகின்ற காலளவான அளவிற்பட்ட சிலவாகிய நீருள்ளே, களிறு அட்டு வீழ்க்கும் - யானையைக் கொன்று வீழ்க்கும், ஈர்ப்பு உடை கராஅத்து அன்ன என் ஐ - இழுத்தலையுடைய முதலையை ஒக்கும் என் இறைவனது, நுண் பல் கருமம் நினையாது - நுண்ணிய பல காரியங்களையும் நினையாமலே, இளையன் என்று இகழின் - அவனை இளையனென்று மதியாதிருப்பின், ஆடு பெறல் அரிது - வென்றிபெறுதல் நுங்களுக்கு அரிது.—எ - று.

மறவீர், நுமக்குச் சாற்றுதும்; என்னை இளையனென்றிகழின் வென்றி பெறுதல அரிது; ஆதலால், நீர் போற்றுமினெனக் கூட்டுக.

மீப்புடையென்றோதி, மிகுதியையுடையவென்று செப்பினுமமையும்.

கு - பு. மறவீர் - வீரர்களே. நும்மை, உருபுமயக்கம். கராம் - முதலை விசேடம்; இதனை, “கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமும்” என்னுங் குறிஞ்சிப்பாட்டாலும், அதனுரையாலு முணர்க. வீழ்க்குங்கராமெனக. என் ஐ - எனது தலைவன்; “என்னைமுன் னில்லன்மின் றெவ்விர்” (௭௭௧) எனத் திருக்குறளில் வந்திருத்தல் காண்க. ஆடு - வென்றி. மறவர்களை நோக்கிக் கூறியதுபோலத் தலைவனது வென்றி கூறியவாறு. (௧௦௪)

(௧௦௫.) சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
௫ கொள்ளுழு வியன்புலத் துழைகா லா

* எந்தையென்றும் பாடம்.

மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
*பாரி வேள்பாற் பாடினை செலினே.

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.
வேள்பாரியைக் கபிலர் பாடியது.

இ - ள்.—வாள் நுதல் விறலி - ஒளிதங்கிய நெற்றியையுடைய விறலி, மெயிழை பெறுகுவை - சிவந்த ஆபரணங்களைப் பெறுவாய்; தடவு வாய் கலித்த மா இதழ் குவளை - பெரிய இடத்தையுடைய சுனையின்கண் தழைத்த கரிய இதழையுடைய நீலத்தினது, வண்டு படு புதுமலர் - வண்டு மொய்க்கும் புதிய மலரின்கண், தண சிதர் கலாவ - குளிர்ந்த துளி கலக்க, பெய்யினும் பெய்யாதாயினும் - மழைபெய்யினும் பெய்யாதொழியினும், அருவி—, கொள் உழு வியன் புலத்து உழை காலாக - கொள்ளிற்கு உழுத பரந்த நிலத்திடை நீரோடுகாலாக ஓட, மால்பு உடை நெடுவரை கோடுதோறு இழிதரும் - கண்ணேணியையுடைய நெடிய மலையினது சிகரந்தோறும் இழிதரும், நீரினும் இனிய சாயல் - நீரினும் மிக இனிய மென்மையையுடைய, பாரி வேள்பால் பாடினை செலினே - வேள்பாரிபக்கலே நீ பாடிச்செல்வாயாயின்.—எ - று.

விறலி, பாரிவேள்பாற் பாடினை செலின், செயிழைபெறுகுவையெனக் கூட்டுக.

அவன்மலையாதலால், எக்காலமும் அருவி கோடுதோறிழிதருமெனப்பட்டது. புதுமலர்த் தண்சிதர் கலாவப் பெய்யினும் பெய்யாதாயினும் உழை காலாகக் கோடுதோறிழிதரும் அருவிநீரினும் இனிய வென வியையும்.

எனவே அவன்குணங்கள் தோன்றிநின்றன.

கு - பு. தடவுவாய் - அன்மொழித்தொகை. மா - கருமை. கலாவ - காரியப்பொருட்டு உழை - இடம். கண்ணேணியாவது - கணுக்களிலேயே அடிவைத்து ஏறிச்செல்லும்படி அமைத்துள்ள மூங்கில். பாரியின் மலையாகிய பறம்பிலுள்ள அருவியையும், அதிலுள்ள சுனையையும் நல்லிசைப்புலவர் பலரும் பாராட்டியுள்ளார்; "பாரி பறம்பிற் பனிச்சுனை போலக், காண்டற் கரியள்" என்பது இந்நூல், கூஉ எ; "பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரி" என்பது சிறுபாணாற்றுப்படை, கூ0 - கக; "பாரிபறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்" என்பது குறுந்தொகை, ககூ; "பாரி யம்பெரும்பைஞ்சுனை பூத்த, தேங்கமழ் புதுமலர்" என்பது அகநானூறு, எஅ. தோன்றிநின்ற அவன்குணங்களாவன: தண்மை, வறப்பினும் வளந்தரும் வண்மைமுதலியன. (க0கு)

* பாரியின் பெருமையை "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறி னுங்கொடுப் பாரிலை" என்ற ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் திருவாக்காலு முணர்க; திருப்புகலூர்த்தேவாரம்.

(௧௦௬.) நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் *பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினுங்
கடவன் பாரி கைவண் மையே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—நல்லவும் தீயவும் அல்ல - நல்லனவென்றும் தீயனவென்றும் சொல்லப்படுவன சூடும்பூவாதலால் அவையிரண்டினும்வைத்து எண்ணப் படாத, குவி இணர் புல் இலை எருக்கம் ஆயினும் - குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையையுமுடைய எருக்கம்பூவாயினும், உடையவை கடவுள் பேணேம் என்னா - ஒருவனுடையவற்றைத் தெய்வங்கள் விரும்பேமென்னா; ஆங்கு - அதுபோல, மடவர் மெல்லியர் செல்லினும் - யாதும் அறிவில்லாதாரும் புல்லியகுணங்களையுடையாரும் செல்லினும், பாரி கைவண்மை கடவன் - பாரி கைவண்மைசெய்தலைக் கடப்பாடாகவுடையவன்.—எ - று.

'குவியிணர்ப் புல்லிலை யெருக்கம்' என்றது, முதற்கேற்ற அடையடுத்த ஆகுபெயர். உம்மை - இழிவுசிறப்பு. மெல்லியரென்பதற்கு வறுமையுற்றோரென்று முரைப்பர்

கு - பு நல்லவுந்தீயவுமென்றது சூடுதற்குரிய பூக்களை யென்றும், சூடாப்பூவாகியஎருக்குத் தீயனவற்றின்வரிசையில்வைத்தும் எண்ணப்படாத தென்றுங் கொள்க; எருக்கம்பூவின் இழிவைக்கூறியபடி; இங்ஙனமிழிந்த எருக்கம்பூவையும் கடவுள் பேணுதலை, "துன்னியவூ ரினும்விரைசார்ந் தறியாத புல்லெருக்குஞ் சூடிக் கொண்டாய்" என்னும் ஸ்ரீரத்தினகிரிக்கலம்பகச் செய்யுள்முதலியவற்றா லுணர்க; ௩௬. யாதும் - சிறிதும். மடம் - அறியாமை. கடப்பாடு - கடமை எருக்கமென்றது பூவுக்கானமையின், ஆகுபெயரென்றார். 'முதற்கேற்றஅடையடுத்தது' என்றதை "கருந்தகட் டுளைப்பூ மருதி னொள்ளிணர்" என்னுந் திருமுருகாற்றுப்படையிலுங் காண்க; உஅ - ம் அடி. உம்மை, 'செல்லினும்' என்பதி லுள்ளது. (௧௦௬)

(௧௦௭.) †பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

வேண்டேமென்னாவென்றும் பாடம்.

† இப்பாட்டு, தொல். பொரு. புறத்திணையியலில், ௩௫ - ம் சூத்திரத்தில் "கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தல்" என்பதனுரையிற் கொடுப்போரை எத்தியதற்கும், உவமவியலில், "உவமத்தன்மையும்" என்னும் ௩௪ - ம் சூத்திரவுரையிற் பட்டாங்குவமத்திற்கும் உதாரணமாகவந்துள்ளது.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—பாரி பாரி என்று பல ஏத்தி - பாரி பாரி என்று சொல்லி அவனுடைய பலபுகழையும் வாழ்த்தி, ஒருவன் புகழ்வர் செந்நா புலவர் - அவ்வொருவனையே புகழ்வர் செவ்விய நாவையுடைய அறிவுடையோர்; பாரி ஒருவனும் அல்லன் - பாரியாகிய ஒருவனுமே அல்லன்; மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பது - மேகமும் உண்டு, இவ்விடத்து உலகத்தைப் பாதுகாத்தற்கு.—எ - று.

உலகுபுரத்தற்கு மாரியுமுண்டாயிருக்கப் பாரியொருவனைப்புகழ்வர் செந்நாப்புலவரெனப் பழிச்சதுபோலப் புகழ்ந்தவாறு.

கு - பு. பலபுகழ் - கொடை, வீரம், கல்வி முதலியவற்றால் வருவன. 'புரப்பதற்கு' என்னும் நான்கனுருபு செய்யுள்விகாரத்தாற் றொக்கது; "ஐந்தவித்தானாற்றல்" என்புழிப்போல. "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்னுந் திருக்குறள் ஈங்கே அறியத் தக்கது. இச்செய்யுள் விலக்குவமையணியின்பாற்படுமென்பர் இலக்கண விளக்கவுரையாசிரியர்; ஈ ந - து இது, மாரிக்கும் பாரிக்கும் வேற்றுமை யில்லையென்னுந் தன்மைபடக் கூறவே அவனுயர்வு கூறியதாயிற்று. (௧0௭)

(௧0௮.) குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
யார மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னா னவர்வரை யன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.— குறத்தி மாட்டிய வறல் கடைக்கொள்ளி - குறத்தி மடுத்தெரிக்கப்பட்ட வற்றிய கடைக்கொள்ளி, ஆரம் ஆதலின் - சந்தனமாதலால், அம் புகை - அதன் அழகியதாகிய புகை, அயலது சாரல் - அதற்கு அருகாகிய சாரற்கண், வேங்கை பூஞ்சினை தவழும் பறம்பு - வேங்கைமரத்தின் பூங்கொம்பின்கட் பரக்கும் பறம்பானது, பாடினரது - பாடுவார்க்குக் கூறிட்டுக்கொடுத்தலின் அவருடையதாயிற்று; அறம் பூண்டு - தன்மத்தைப் பரித்து, பாரியும்—, பரிசிலர் இரப்பின் - பரிசிலர் வேண்டுவாராயின், வாரேன் என்னான் - அவ்வழி வாரேனென்றுசொல்லானாகி, அவர் வரையன் - அவரெல்லைக்கண்ணே நிற்பன்.—எ - று.

சந்தனப்புகை வேங்கையின்மிசைத்தவழும் பறம்பெனவே, இலையொழிய மாமின்மையும், பகைவர்சுடும் புகையின்மையும் கூறியவாறாயிற்று

கு - பு. மடுத்து - சேர்த்து. கடைக்கொள்ளி - தலையில் நெருப்பையுடைய மரக்கட்டை. புகைக்கு அழகு, மணமுதலியன. சாரல் - மலைப்பக்கம்; சார்ந்த இடமென்றபடி. பூங்கொம்பு - பூக்களையுடையகிளை. கூறிட்டுக்கொடுத்தல் - பங்கிட்டுக்கொடுத்தல். அவருடையது - அப்பாடினோருடையது. பரித்து - தாங்கி. அவ்வழி - அவ்விடத்து. 'வரையன்னே' என்பது விரித்தல். பகைவர் சுடுதலை, 'எரிபரந்தெடுத்தல்' என்னுந்துறையென்று தொல்காப்பியரும், ஊர்கொலை, உழபுலவஞ்சி முதலிய துறைகளின்பாற்படுமென்று ஐயனாரிதனாரும் கூறுவர். (க0அ)

(க0௯.) அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

திணை - நொச்சி; துறை - மகண்மறுத்தல்.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—அளிது - இரங்கத்தக்கது; பாரியது பறம்பு - பாரியுடைய பறம்பு, நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும் - பெருமையைக்கொண்ட முரசினையுடைய நீயிர்மூவேந்தரும் சூழ்ந்திடினும்; உழவர் உழாதன நான்கு பயன் உடைத்து - உழவரால் உழுதுவிளைவிக்கப்படாதனவாகிய நான்கு விளையுளையுடைத்து; அவற்றுள், ஒன்றே - முதலாவது, சிறியிலை வெதிரின் நெல் விளையும் - சிறிய இலையையுடைய மூங்கிலினது நெல் விளையும்; இரண்டே - இரண்டாவது, தீஞ்சுளை பலவின் பழம் ஊழ்க்கும் - இனியசுளையையுடையபலாவினது பழம் உதிரும்; மூன்றே-மூன்றாவது, கொழுங்கொடி வள்

ளிக்கிழங்கு வீழ்க்கும்-கொழுவியகொடியையுடையவள்ளிக்கிழங்கு தாழவிருக்கும்; நான்கு - நான்காவது, அணிநிறம் ஓரி பாய்தலின் - அழகிய நிறத்தையுடைய நீலநிறம் பாய்தலால், மீது அழிந்து - அதன்மேற் * பவரழிந்து, திணிநெடுங்குன்றம் தேன் சொரியும் - கனத்த நெடியமலை தேனைப்பொழியும்; வான்கண் அற்று அவன் மலை - அகல நீள உயரத்தால் வானிடத்தையொக்கும் அவனதுமலை; வானத்து மீன் அற்று அதன் சுனை - அவ்வானத்தின்கண் மீனையொக்கும் அம்மலையின்கட்சுனை; ஆங்கு - அவ்விடத்து, மரங்தொறும் பிணித்த களிற்றினிராயினும் - மரங்கடோறும் கட்டப்பட்ட யானையையுடையீராயினும், புலந்தொறும் பரப்பிய தேரினிராயினும் - இடந்தோறும் பரப்பப்பட்ட தேரையுடையீராயினும், தாளின் கொள்ளலிர்-உங்கள் முயற்சியாற்கொள்ளமாட்டீர்; வாளின் தாரலன் - நுமதுவாள்வலியால் அவன்தாரான்; யான் அறிகுவன் அது கொள்ளும் ஆறு - யான் அறிவேன் அதனைக் கொளளும்பரிசை; சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி - வடித்தமுறுக்கப்பட்ட நரம்பினையுடைய சிறியயாழைப் பண்ணி வாசித்து, விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர - நறுநாற்றத்தையுடைய தழைத்த கூந்தலையுடைய நும்விறலியர் பின்னேவர, ஆடினிர் பாடினிர் செலின் - ஆடினிராய்ப் பாடினிராய்ச்செல்லின், நாடும் குன்றும் ஒருங்கு ஈயும் - அவன் நுமக்கு நாட்டையும் மலையையும் கூடத்தருவன் — எ - று.

அளிதோவென்பது, ஈண்டு வியப்பின்கண்வந்தது. ஓரியென்பது, தேன்முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம்; முசுக்கலையெனினும் அமையும். குன்றம் தேன்சொரியுமென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறிநின்றது. நான்குபயனுடைத்தென்றுவைத்து, நெல்விளையும் பழமூழ்க்கும் கிழங்குவீழ்க்கும் தேன்சொரியுமென்று அவற்றின் செய்கைதோன்றக் கூறினாரெனினும், கருதியது: நெல்லும் பழமும் கிழங்கும் தேனுமாகக் கொள்க. வான்கணற்றணிமலையேயென்று பாடமோதுவாருமுளர். வான்கணற்றென்றது, மலையின் ஒக்கமும், பரப்பும். மீன்கணற்றென்றது, சுனையினது பன்மையும், தெளிவும், சிறுமையும். ஈண்டுக் கண்ணென்பது, அசைநிலை. தாள் என்றது, படையறுததலும் அழித்தற்குவேண்டும் கருவிமுதலாயின இயற்றலும். விறலியரென்றது, அவர் உரிமைமகளிரை.

கு - பு. அளி - இரக்கம். 'இரங்கத்தக்கது' என்றதற்கு எழுவாய், பாரியைக்கொல்ல நினைந்து நால்வகைப்படையுடன் பறம்பைச் சூழ்ந்த மூவேந்தருடையசெயல் மூவேந்தர் - சேரசோழபாண்டியர். விளைவு - விளைச்சல். 'சிறியிலை' என்பதில் யகரம் விகாரத்தால் தொக்கது. விளையும்மே, ஊழ்க்கும்மே, வீழ்க்கும்மே, சொரியும்மே, ஈயும்மே யென்பனவற்றில் மகரவொற்றுக்கள் விகாரத்தால் விரிந்தன. கிழங்கு கீழேதாழவிருததலை வீழ்த்தலென்றல் மரபு; "வள்ளி கீழ் வீழா வரைமிசைத் தேன்றொடா" (௩௬) என்னுங் குறிஞ்சிக்கலியாலும், "வயப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை" (௩௦௭-௩௦௮) என்னும் மலைபடு

பவரழிந்தென்றும் பாடம்.

கடாத்தாலு முணர்க. ஓரி - தேன்முதிர்ந்தாற்பரக்கும் நீலநிற மென்பதை, "நீணிற வோரி பாய்ந்தென நெடுவரை. நேமியிற் செல்லு நெய்க்கணிறால்" (௫௨௪ - ௫௨௫) என்னும் மலைபடுகடாத்தாலுமுணர்க. பவர் - மேற்பகுதி. மீன் - நக்ஷத்திரம். மீன்கணற்று - மீனற்று. பரிசை - விதத்தை. சுகிர்தல் - சிக்கறவடித்தல். பண்ணி - வாசித்தற்கு ஆயத்தஞ்செய்து. ஒலித்தல் - தழைத்தல்; 'ஒலிதெங்கு" என்பது பதிற்றுப்பத்து, இரண்டாம்பத்து, ௩. நாடு - பறம்புநாடு. குன்று - பறம்புமலை. 'வியப்பின்கண்வந்தது' என்றது, 'அளிதோ' என்பதிலுள்ள ஓகாரத்தை. மலையின் ஊக்கம் - மலையின் உயர்ச்சி. இச்செய்யுளை, தொல்காப்பியப்புறத்திணையியலில் "கொள்ளார்தேஎம்" என்னும் ௧௨-ம் சூத்திரவுரையில் அகத்து உழிஞையோனுடைய குறைவில்லாதபெருஞ்செல்வங் கூறுத லென்னும் பொருளில் வரும் 'அகத்தோன் செல்வம்' என்னுந்துறைக்கு உதாரணமாகக் காட்டினர் நச்சினார்க்கினியர். படை - கரந்துபடை. (௧௦௯)

(௧௧௦.) கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

திணையும் துறையும் அவை.

மூவேந்தரும் பறம்புமுற்றியிருந்தாரை அவர் பாடியது.

இ - ள் —கடந்து அடு தானை மூவிரும் கூடி - வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் படையினையுடைய மூன்றுதிறத்தீருங் கூடி, உடன்றனிராயினும் - பொருதிராயினும், பறம்பு கொளற்கு அரிது - பறம்பானது நும்மாற் கொள்ளுதற்கு அரிதாகும்; முந்நூறு ஊர்த்து தண் நல் பறம்பு நாடு - முந்நூறு ஊர்களையுடையது குளிர்ந்த நல்ல பறம்புநாடு; முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர் - அம்முந்நூறு ஊர்களையும் பரிசிலர்பெற்றார்; நீர் பாடினிர் செலின் - நீவிர் பாடினிராய்வரின், யாமும் பாரியும் உளம் - நுமக்கு யாமும் பாரியுமுள்ளேம்; குன்றும் உண்டு - அதுவேயன்றி மலையுமுண்டு.—எ - று.

நீர் பாடிவரினும் பறம்புநாடு பரிசிலர்முன்னேபெற்றமையின், அது நுமக்குக் கிடையாதென்பது கருத்தாகக்கொள்க.

கு - பு. கடத்தல் - இப்பொருட்டாதலை, "ஒன்னுதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற" என்னும் பாலைக்கலிக்கு நச்சினார்க்கினிய ரெழுதிய உரையாலுணர்க; உஎ. மூவிரென்றது சேரசோழபாண்டியர்களை. உடன்றனிராயினும், உம்மை - சிறப்பு. பரிசிலர் - இரந்துவந்தோர். குன்றென்றது, பறம்பினை. பாடினிர் - வினையெச்சமுற்று. 'யாமும்பாரியு முளம்' என்றதனால், "அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா, ரென்பு முரியர்

பிறர்க்கு" என்னுந் திருக்குறளுக்கிணங்கப் பரிசிலர்பாற் பாரிக்குள்ள அன்பின் சிறப்பும், 'குன்றுமுண்டு' என்றதனாற் பறம்பு அதுகாறும் பரிசிலர்க்குக்கொடுக்கப்படாமையும் விளங்குகின்றன. (கக0)

(கக௧.) அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—அளிது - இரங்கத்தக்கது; பேர் இருங்குன்று - பெரிய கரிய குன்றம்; வேலின் வேறல் வேந்தர்க்கு ஓ அரிது - அது வேலான்வெல்லுதல் வேந்தர்க்கோ அரிதாகும்; பாடினள் வரின் - பாடினளாய் வருவாளாயின், நீலத்து இணை மலர் புரையும் உண் கண் கிணைமகட்கு எளிது - நீலத்தினது இணைந்த மலரை யொக்கும் மையுண்டகண்ணையுடைய விறலிக்கு எளிதாகும்.—எ - று.

பாடினளாய்வரினென்றகருத்து: அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் மயக்கி வென்றுகோடல் அரிதென்பதாம்.

கு - பு. அளிதோவென்பதில் ஓ வியப்பின்கண் வந்தது. தான் ஏ இரண்டும் அசைநிலை. இருமை - கருமை; "இரும்பிடித்தொழுதி" என்பது இந்நூல் ௪௪ - ம் பாட்டு. இணைந்தமலர் - இரண்டாகச்சேர்ந்தமலர். கிணை - தடாரிப்பறை. க0௯ - ம்பாட்டுமுதலியவற்றை மகண்மறுத்துமொழிதலென்னுந்துறையாகக்கூறியிருத்தலால், மூவேந்தரும் பாரிமகளிரை விரும்பிவந்ததுபற்றி அவனுக்கும் அவர்களுக்கும் பெரும்போர்நிகழ்ந்ததென்பது, ஊகித்தறியப்படுகின்றது. (கக௧)

(ககஉ.) அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
௫ குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

பாரிமகளிர் பாடியது.

இ - ள்.—அற்றை திங்கள் அ வெண்ணிலவின் - மூவேந்தரும் முற்றியிருந்த அற்றைத்திங்களின் அவ்வெள்ளியநிலாவின்கண், எந்தையும் உடையேம் - எம்முடையதந்தையையுமுடையேம்; எம குன்றும் பிறர் கொளார் - எம்முடையமலையையும் பிறர் கொள்ளார்; இற்றை திங்கள் இ வெண்ணிலவின் - இற்றைத்திங்களது இவ்வெள்ளியநிலவின்கண், வென்று எறி முரசின்

வேந்தர் - வென்றறைந்த முரசினையுடைய அரசர், எம் குன்றும் கொண்டார் - எம்முடைய மலையையும் கொண்டார், யாம எந்தையும் இலம் - யாம் எம்முடையதந்தையையு மிழந்தோம்.—எ - று.

திங்களை மாதமென்பாரு முளர். ஒருவனை மூவேந்தருமுற்றியிருந்தும் வஞ்சித்துக்கொன்றமையின், 'வென்றெறி முரசின் வேந்தர்' என்றது, ஈண்டு இகழ்ச்சிக்குறிப்பாய்நின்றது.

கு - பு. முற்றியிருந்த - சூழ்ந்திருந்த. அற்றை என்பது நெஞ்சறிசுட்டு. திங்கள் - சந்திரன். அறைந்த - முழக்கிய. தந்தையென்றது பாரியை. 'வென்றெறிமுரசின்வேந்தர்' என்றது, இந்நூலில் "ஒல்லுவதொல்லும்" என்னும் ௧௯௬-ம்பாட்டிலுள்ள 'நோயிலராகநின்புதல்வர்', 'சிறக்கநின்னாள்' என்பனபோல் இகழ்ச்சிக்குறிப்பாய்நின்றது. (௧௧௨)

(௧௧௩.) மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவு
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னே முன்னே யினியே
௫ பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.

திணையும் துறையும் அவை.

அவன்மகளிரைப் பார்ப்பார்ப் படுக்கக்கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது.

இ - ள்.—மட்டு வாய திறப்பவும் - மதுவிருந்தசாடியை வாய்திறப்பவும், மை விடை வீழ்ப்பவும் - ஆட்டுக்கிடாயை வீழ்ப்பவும், அட்டு ஆன்று ஆனா கொழுந் துவை ஊன்சோறும் - அடப்பட்டு அமைந்தொழியாத கொழுவிய துவையையும் ஊனையுமுடைய சோற்றையும், பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி - விரும்பியபரிசே தரும் மிக்கசெல்வமுதிர்ந்து, நட்டனை முன்னே - எம்மோடு நட்புச்செய்தாய் முன்பு; இனி - இப்பொழுது, பாரி மாய்ந்தென கலங்கி - பாரி இறந்தானாகக் கலங்கி, கையற்று - செயலற்று, நீர் வார் கண்ணேம் - நீர்ஒழுகுகின்றகண்ணையுடையேமாய், தொழுது நின் பழிச்சி சேறும் - தொழுது நின்னைவாழ்த்திச் செல்லுதும், பெரும்பெயர் பறம்பே - பெரியபுகழையுடைய பறம்பே, கோல் திரள் குறுந்தொடி முன்கை மகளிர் - கோற்றொழிலாகச்செய்யப்பட்ட திரண்ட குறியவளையையணிந்த முன்கையினையுடைய மகளிரது, நாறு இரு கூந்தல் கிழவரை படர்ந்து - மணங்கமழும் கரியகூந்தலைத் தீண்டுதற்கு உரியவரை நினைந்து.—எ - று.

பறம்பே, பெருவளம்பழுனி நட்டனை, முன்; இனி நாறிருங்கூந்தற் கிழவரைப்படர்ந்து சேறுமெனக் கூட்டுக.

மன் - கழிவின்கண்வந்தது. வாழியும், ஓவும் - அசைநிலை. ஆனாக்கொழுந்துவை யென்பதற்கு - விருப்பம் அமையாத கொழுந்துவை யெனினு மமையும்.

து - பு. விடை - இப்பொருட்டாதலை "மசவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடை" என்னுந்திருமுருகாற்றுப்படையாலுமுணர்க; உகூஉ. அடப்பட்டு - சமைக்கப்பட்டு. துவை - உணவின்விசேடம்; துவையலென்றுங் கூறப்படும். கண்ணும் - வினையெச்சமுற்று. பெயர் - புகழ்; "பெரும் பெயர்ப் பிரமன்" என்பது சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், கஎஅ. மகளி ரென்றது - பாரியின்புதல்வியரை. கிழமை - உரிமை. கூந்தலைத்தீண்டுதற்கு உரியவர் கணவர்; இஃது, "இவளிவ னாம்பால் பற்றவு மிவளிவன், புன்றலை யோரி வாங்குநள் பரியவும்" என்னும் குறுந்தொகை, உஉகூ - ஆம் செய்யுளாலும், "பேசிய பெயரி னாளைப் பேதுறத் தொழிவே னாயின், ஆசமன் பிலாத புன்பெண் கூந்தல்யா னணைவ னென்றான்" என்னும் சிந்தாமணி, சுரமஞ்சரி யாரிலம்பகம் அ - ம் கவியாலுமுணரப்படும். மன்றே, ஓ - அசை நிலை. (ககங)

(ககச.) ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரைச்
சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
ரு வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே.

திணையுந் துறையும் அவை.

அவன்மகளிரைக்கொண்டுபோம் கபிலர் பறம்புநோக்கிநின்றுசொல் லியது.

இ - ள்.—ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் - இவ்விடத்துநின்றோர்க் குந் தோன்றும்; சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும் மன்ற - சிறிது எல்லைபோய் நின்றோர்க்கும் தோன்றும், நிச்சயமாக; களிறு மென்றிட்ட கவளம்போல - யானை மென்றுபோகடப்பட்ட கவளத்தினது கோதுபோல, நறவு பிழிந்திட்ட கோது உடை சிதறல் - மதுப்பிழிந்துபோகடப்பட்ட கோதுடைத்தாகிய சிதறியவற்றினின்றும், வார் அசும்பு ஒழுகும் முன்றில் - வார்ந்த மதுச்சேறு ஒழுகும் முற்றத்தையுடைய, தேர் வீசு இருக்கை நெடியோன் குன்று - தேர்வழங்கும் இருப்பையுடைய உயர்ந்தோனுடையமலை.

நெடியோன்குன்று தோன்றுமென்றது, புகழான் உயர்ந்து காணாதார்க் கும் செவிப்புலனாகத்தோன்றும், அவனுள்ளகாலத்து; இப்பொழுது பிற மலைபோலக் கட்புலனாகத்தோன்றுமளவாயிற்றெனக் கையற்றுக்கூறியவா றாகக் கொள்க.

கு - பு. மன்ற - தெளிவென்னும்பொருளைத்தருவதோரிடைச்சொல்; "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம், இடைச்சொல்லியல், கஎ. கவளம் கோதுக்குவமம். வார்ந்த - ஒழுகிய இங்கே பாரியை 'தேர்வீ சிருக்கை நெடியோன்' என்றதுபோல, "தேர்வண் பாரி" என்று பின்னுங்கூறுவர்; "சுரும்புண, நறவுவா யுறைக்கு நாக நெடு வழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்" என்னும் சிறுபாணாற்றுப்படையாலும். "பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடாதாயினுங், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்தோங்குசிறப்பிற்பாரி" என்னும் இந்நூல் உ00 - ம் செய்யுளாலும் இவன் முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்தானென்று தெரிகின்றது; இதுபற்றியே, "முல்லைக்குத் தேரு மயி லுக்குப் போர்வையு, மெல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை, யிரவாம லீந்த விறைவர்போ னீயுங், கரவாம லீகை கடன்" என்றார் புறப்பொருள் வெண்பாமாலையுடையாரும். குன்று தோன்றுமென்க. நெடியோன் - பாரி. கையற்று - செயலற்று. (கக௪)

(ககரு.) ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வே
லண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய வினியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள் —ஒருசார் அருவி ஆர்ப்ப - ஒருபக்கம்அருவிஆர்த்துஒழுக, ஒரு சார் பாணர் மண்டை நிறைய பெய்ம்மார் - ஒருபக்கம் பாணருடையமண்டை கள்நிரம்பும்படிவாக்கவேண்டி, வாக்க உக்க தேக்கள்தேறல் - வடித்தலால் உக்கஇனியகள்ளாகியதேறல், கல் அலைத்து ஒழுகும் - கல்லையுருட்டிஒழு கும்; பல்வேல்அண்ணல்யானைவேந்தர்க்கு - பலவேற்படையுடனே தலைமை பொருந்தியயானையையுமுடைய வேந்தர்க்கு, இன்னான் ஆகிய இனியோன் குன்று - கொடியோனாகிய இனியோன்மலை; மன் - அதுகழிந்தது —எ - று.

குன்று தேறல் கல்லலைத்தொழுகும்; இனி அதுகழிந்ததென்றுகூட்டுக.

அருவியும் அவனுள்ளனாயின் உளசாவதென்பது கருத்து. மன் - கழி வின் கண் வந்தது. குன்று தேறல் கல்லலைத்தொழுகுமென இடத்துநிகழ் பொருளின் றொழில் இடத்துமேல் எறிநின்றது.

கு - பு. மண்டை - பிச்சைப்பாத்திரம். உக்க - சிந்திய. வேந்தர்க்கு இன்னானென்றமையால், இரவலர்க்குஇனியோன்என்பது பெறப்பட்டது.()

(௧௧௬.) தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் ....
லேந்தெழின் மழைக்க ணின்னகை மகளிர்
புன்மூசு கவலைய முண்மிடை வேலிப்
பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட்
பீரை நாறிய சுரையிவர் மருங்கி
ணீத்திலைக் குப்பை யேறி யுமண
ருப்பொய் யொழுகை யெண்ணுப மாதோ
நோகோ யானே தேய்கமா காலை
பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவுங்
கலையுங் கொள்ளா வாகப் பலவுங்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே
யண்ணல் நெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ-ள்.—தீ நீர் பெரு குண்டு சுனை பூத்த குவளை - இனிய நீரை யுடைய பெரிய ஆழ்ந்த சுனைக்கட் பூத்த செங்கழுநீரினது, கூம்பு அவிழ் முழுநெறி புரள்வரும் .... - முகையவிழ்ந்த புறவிதழொடித்த முழுப்பூவாற்செய்யப்பட்ட தழையசையும் அரையினையும், ஏந்து எழில் மழை கண் - மிக்க அழகையுடைய குளிர்ந்த கண்ணினையும், இன் நகை மகளிர் - இனிய முறுவலையுமுடைய மகளிர், புல் மூசு கவலைய முள் மிடை வேலி - புல் மொய்த்த கவலையுடையவாகிய முள்ளால்நெருங்கிய வேலியையும், பஞ்சி முன்றில் - பஞ்சுபரந்த முற்றத்தையுமுடைய, சிற்றில் ஆங்கண் - சிறியமனையிடத்தின்கண், பீரை நாறிய - பீர்க்கு முளைத்த, சுரை இவர் மருங்கின் - சுரைபடர்ந்த இடத்தில், ஈந்து இலை குப்பை ஏறி - ஈத்திலையையுடைய குப்பையின் கண்ணே ஏறி, உமணர் உப்பு ஒய் ஒழுகை எண்ணுப - உப்பு வாணிகர்கள் உப்புச்செலுத்தும் சகடத்தை எண்ணுவர்; நோகோ யான் - நோவேன் யான்; காலை தேய்கமா - எனது வாழ்நாள் கெடுவதாக; பயில் பூஞ் சோலை - நெருங்கிய பூவையுடைய சோலைக்கண், மயில் எழுந்து ஆலவும் - மயில் எழுந்து ஆடவும், பயில் இரு சிலம்பில் - பயின்ற பெரிய மலைக்

கண்ணே ஏறி, கலை பாய்ந்து உகளவும் - முசுக்கலைபாய்ந்து தாவவும், கலையும் கொள்ளா ஆக - அம்முசுக்கலையும் நுகர்ந்து வெறுத்தலால் கொள்ளாவாம் பரிசு, காலம் அன்றியும் மரம் பலவும் பயம் பகரும் - காலம் அன்றாகவும் மரங்கள் பலவும் காயும் பழமுமுதலாயினவற்றை விளைந்து கொடுக்கும், யாணர் அறா வியன் மலை அற்று - புதுவருவாய் ஒழியாத அகன்ற மலையைப்போலும் பயனுடைத்தாகிய, அண்ணல் நெடுவரை ஏறி - தலைமையையுடைய உயர்ந்த வரையின்கண்ணே ஏறி, தந்தை - தம்முடைய தந்தையாகிய, பெரிய நறவின் கூர் வேல் பாரியது - மிக்க மதுவினையும் கூரியவேலினையுமுடைய பாரியது, அருமை அறியார் - பெறுதற்கு அருமையை அறியாராய், போர் எதிர்ந்து வந்த - போர் ஏற்று வந்த, வலம்படு தானை வேந்தர் - வென்றிப்பட்ட சேனையையுடைய அரசரது, பொலம்படை கலிமா எண்ணுவோர் - பொன்னாற் செய்த கலனை முதலியவற்றையுடைய மனஞ்செருக்கிய குதிரையை எண்ணுவோர்.—எ - று.

வியன்மலையென்றது, அரைமலையை. நெடுவரையென்றது, உச்சிமலையை.

இன்னகைமகளிர், நெடுவரையேறி முன்பு வேந்தர்கலிமாவை எண்ணுவோர், இப்பொழுது ஈத்திலைக்குப்பையேறி உமணர் உப்பொய்யொழுகையை எண்ணுவர்; இதற்கு நோவேன் யான்; எனதுவாழ்நாள் கெடுவதாக வென வினைமுடிவுசெய்க.

அற்றேயென்னும்ஏகாரம் - அசைநிலை; வியன்மலை அத்தன்மைத்தெனப் பிறிதோர்தொடராக்கி உரைப்பினு மமையும்.

கு - பு. முழுநெறி - புறவிதழொடித்த முழுப்பூ; **சிலப்பதிகாரம்**, மனையறம்படுத்தகாதையில், "கழுநீ ராம்பன் முழுநெறிக் குவளை" எனவும், "கழுநீர்ப் பிணையன் முழுநெறி" எனவுமுள்ள அடிகளில் வந்த முழுநெறி என்பதற்கு முறையே இதழொடிக்கப்படாத தென்றும், இதழொடியாது கட்டினதென்றும் பொருள்கூறுவர் **அடியார்க்குநல்லார்**. தழை - குறிஞ்சி நிலத்து மகளிரணியும் ஒருவகை உடை; இது கழுநீர்முதலிய மலர்களினாலேனும், தளிர்களினாலேனும், விரவிய இவ்விரண்டினாலேனும் ஆக்கப்படுவது; இதனை, "அளிய தாமே சிறுவெள் ளாம்பல், இளைய மாகத் தழையா யினவே" என்னும் இந்நூல் ௨௪௮ - ம் செய்யுளாலும், "முடித்த குல்லை யிலையுடை நறும்பூச், செங்கான் மராஅத்த வாலிணர் இடையிடுபு, சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை........ ...உடீஇ" (௨0௧ - ௨0௪, என்னும் **திருமுருகாற்றுப்படை**யாலு முணர்க. முறுவல் - சிரிப்பு. கவலை - கவர்த்த வழி. ஈத்திலை - ஈச்சமரத்தின் இலை. ஒய்தல் - செலுத்துதல். ஒழுகை - பண்டியொழுங்கு. சகடம் - பண்டி. நோகு - நோவேன்; தன்மையொருமைவினைமுற்று; ஓ - அசைநிலை. முசுக்கலை - ஒருவகைக்குரங்கின் ஆண். மகளிரென்றது, அம்மலையில்வாழ்வாரை; பாரியின் மகளிரையன்று. தந்தை யென்பது, இந்நூலில் "சிறியகட்பெறினே" என்னும் ௨௩௫ - ம் செய்யுளில்வந்துள்ள 'ஆசாகெந்தை' என்பதுபோல நின்றது. (௧௧௬)

(கக௭.) மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க
ணாமா நெடுநிரை நன்புல் லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயி றுரையப்
பாசிலை முல்லை முகைக்கு
மாய்தொடி யரிவையர் தந்தை நாடே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—மை மீன் புகையினும் - சனிமீன் புகைகளோடுகூடிப் புகையினும், தூமம் தோன்றினும் - எல்லாத்திசைகளிலும் புகைக்கோள் தோன்றினும், தென்றிசைமருங்கின் வெள்ளி ஓடினும் - தென்றிசைக்கண்ணே சுக்கிரன் போகுறினும், வயல் அகம் நிறைய - வயலிடம் விளைவுமிக, புதல் பூமலர - சிறுதூறுகளிடத்துப் பூக்கள் மலர, மனைத்தலை - மனையிடத்து, மகவை ஈன்ற அமர்கண் ஆமா நெடு நிரை - குழவியையீன்ற மேவிய கண்ணையுடைய ஆமாவினது நெடியநிரை, நல் புல் ஆர - நல்லபுல்லை மேய, கோல் செம்மையின் சான்றோர் பல்கி - கோல் செவ்விதாதலின் அமைந்தோர் பலராக, பெயல் பிழைப்பு அறியா புன் புலத்தது - மழை தப்புதலை அறியாத பல்லியநிலத்தின் கண்ணது; பிள்ளை வெருகின் முள் எயிறு புரைய - இளைய வெருகினது கூரியபல்லை ஒப்ப, பாசிலை முல்லை முகைக்கும் - பசிய இலையையுடைய முல்லை அரும்பும், ஆய் தொடி அரிவையர் தந்தை நாடு - நுண்ணிய தொழிலையுடைய வளையினை அணிந்த மகளிருடைய தந்தையின் நாடு—எ - று.

பல்கியென்பதனைப் பல்கவெனத் திரிக்க.

அரிவையர்தந்தைநாடு, பெயல்பிழைப்பறியாப் புன்புலத்தது வெனக் கூட்டுக.

என்றதனாற்போந்தது : புன்புலத்ததாயிருந்ததே! அது பெயல்பிழைப்பறியாமை, கோல்செம்மையினான் உளதாயதன்றே; அவ்வாறு கோல்செவ்விதாக நிறுத்தியவனை இழப்பதேயென்று அவன்நாடு கண்டு இரங்கியவாறாகக் கொள்க.

கு - பு. சனி கரியநிறமுடையனாதலின், மைம்மீனென்றார்; அவனுக்குரிய, காரி, கரியவன் முதலிய காரணக்குறியாலு முணர்க: சனிபுகைதலாவது - இடபம் சிங்கம் மீனம் இவற்றினோடு மாறுபடுதல்; இவற்றுள், சிங்கம் மகராளாதலின் சனி தனக்குப்பகைவீடாகிய சிங்கராசியிற் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்ப னென்பது பற்றியே "மகத்திற் புக்கதோர் சனி

யெனக்காணுய்" என ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனரும், தஞ்சைவாணன் கோவையில், "அடையார்தமக்கு, மகத்திற் சனியன்ன சந்திரவாணன்" எனப் பொய்யாமொழிப்புலவரும், வாயுசங்கிதைக் கடவுள்வாழ்த்தில், "மகத்தில் வாழ்சனியாயினை" என்று அதிவீரராமபாண்டியரும், பாரதம், பதின்மூன்றாம் போர்ச்சருக்கத்தில் "விசயன் றம்முற னுதவி செய்யாமன், மகத்திற் சனிபோல் வளைக்குவம்யாம்" என வில்லிபுத்தூராழ்வாருங் கூறுவாராயினர். தூமம் புகைக்கொடி யென்றும் கூறப்படும்; தூமகேது என்பது மதுவே; அது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் கரந்துறைகோட்கள் நான்கனுளொன்று; இதனுடையதோற்றம் உலகத்திற்குத் தீங்குவிளைவிக்கு மென்பதை "தூமகேது புவிக்கெனத் தோன்றிய" (கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம்) என்பதனாலு முணர்க. தென்றிசைக்கண்ணே வெள்ளி செல்லுதல் தீங்கென்பதை, "வசையில் புகழ் வயங்கு வெண்மீன், றிசை திரிந்து தெற்கேகினும்" (க - உ) என்னும் பட்டினப்பாலையாலு முணர்க. இச்செய்யுளிலுள்ள முதலிரண்டடியின்கருத்து, "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும் விரிகதிர்வெள்ளி தென்புலம்படரினும்" என்று சிலப்பதிகாரம், காடுகாண்காதையில் அமைந்திருத்தல் காண்க. குழவி - கன்று. மேவிய - விரும்பிய ஆமா - காட்டுப்பசு. வெருகு - காட்டுப்பூனை; இதனை 'படப்பை வேலியும் புதலும் பற்றி, விடக்கிற் காக வேற்றுயிர் கொள்வது' என்பர் நச்சினார்க்கினியர். "பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப், பாசிலை முல்லை முகைக்கும்" என்றது, சிந்தாமணியில் கனகமாலையாரிலம்பகத்தில் "வெருகு வேட்பச் சிரிப்பனபோன் முகைத்த முல்லை" என்று திருத்தக்கதேவர் கூறியிருத்தலை நினைப்பிக்கின்றது. 'ஆய்தொடியரிவையர்' என்றது, இங்கே பாரிமகளிரை. முகைக்குநா டென்க. மைம்மீன்புகைதல் முதலியவற்பாதங்கள் நிகழினும் ஆய்தொடியரிவையர்தந்தை நாடு, 'வயலக நிறைய........புன்புலத்ததுவே' என்றதனால், பாரியின் செங்கோன்மை நன்கு புலப்படுகின்றது; "முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி, யொல்லாது வானம் பெயல்" எனவும், "ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்" எனவும் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தல் காண்க. (கக௭)

(ககஅ.) அறையும் பொறையு மணந்த தலைய
வெண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
௫ றேர்வண் பாரி தண்பறம்பு நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—அறையும் பொறையும் மணந்த தலைய - பாறையும்சிறுகுவடுங் கூடியதலையையுடையவாகிய, எண்ணாள் திங்கள் அனைய - எட்டாம்பக்கத்

துப் பிறைபோலும், கொடுங்கரை - வளைந்தகரைகளையுடைய, தெண்ணீர் சிறுகுளம்கீள்வது - தெளிந்தநீரையுடைய சிறியகுளம் பாதுகாப்பாரின்மையின் உடைவதும்போலும்; கூர்வேல் குவைஇய மொய்ம்பின் - கூரியவேலையேந்திய திரண்டதோளையுடைய, தேர்வண்பாரி - தேர்வண்மையைச்செய்யும்பாரியது, தண் பறம்பு நாடு - குளிர்ந்தபறம்புநாடு.—எ - று.

நாடுகுளங்கீள்வதென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் வறிநின்றது. மாதோ - அசைநிலை

கு - பு. சிறுகுவடு - சிறுமலை. எட்டாம்பக்கம் - எட்டாந்திதி; அஷ்டமி. தலையகொடுங்கரையெனவும், நாடுகுளங்கீள்வதெனவும் இயைக்க. நாடு - இடம்; குளம் - இடத்துநிகழ்பொருள்; கீளுதல் - அதன்றொழில். (ககஅ)

(ககக.) கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
௫ நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்து
மிரவலர்க் கீயும் வள்ளியோ னாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—கார் பெயல் தலைஇய - கார்காலத்துமழை பெய்துமாறிய, காண்பு இன் காலை - காட்சியினியகாலத்து, களிற்று முக வரியின் - களிற்று முகத்தின்கண் புகர்போல, தெறுழ் வீ பூப்ப - தெறுழினது மலர் பூப்ப, செம்புற்று ஈயலின் இன் அளை புளித்து - செம்புற்றின்கண் ஈயலை இனிய மோரோடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியையுடைத்து; மெல் தினை யாணர்த்து - மெல்லிய தினையாகிய புதுவருவாயையுடைத்து; முன்பு, நந்துங் கொல்லோ - இனி அது கெடுங்கொல்லோ! நிழல் இல் நீளிடை தனிமரம் போல - நிழலில்லாத நெடிய வழிக்கண் நின்ற தனிமரத்தை யொப்ப, பணை கெழு வேந்தரை இறந்தும் - முரசையுடைய அரசரின் மிகுத்தும், இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடு - இரவலர்க்கு வழங்கும் வண்மையையுடையனது நாடு.—எ - று.

பூப்பவென்னும் வினையெச்சம் இன்னளைப்புளித்தென்னும் குறிப்பொடு முடிந்தது.

வள்ளியோனாடு, இன்னளைப்புளித்து; யாணர்த்து; அது நந்துங்கொலோ வெனக்கூட்டுக.

தெறுழென்றது, காட்டகத்ததோர்கொடி; புளிமாவென்றுரைப்பாருமுளர்.

கு - பு. "தலைப்பெய றலைஇய" என்றார் திருமுருகாற்றுப்படையிலும். புகர் - புள்ளி. தெறுழ் - கார்காலத்து மலர்வதோர் கொடி; குறிஞ்சிப்பாட்டில் "எரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்" என்பதில் எறுழென்பதோர் கொடி கூறப்பட்டுள்ளது. ஈயல் - ஈசல். 'நிழலி னீளிடைத் தனிமரம் போல' என்று ஈண்டுக்கூறியதை நினைந்தே சிந்தாமணி, கடவுள்வாழ்த்தில், "பன்மாண் குணங்கட்கு" என்னும் மூன்றாங்கவியின் விசேடவுரையில், 'அருஞ்சுரத்தின் மரம்போல அடைந்தார்க்களித்தல் அவற்கியல்பு' என்று நச்சினார்க்கினியர் எழுதினரென்று தெரிகின்றது. "அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா, நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி" என்னும் நாலடியார்ச் செய்யுளும் இங்கே அறியத்தக்கது. 'பணைகெழு வேந்தரை யிறந்து, மிரவலர்க் கீயும் வள்ளியோ னாடு' என்று ஈண்டுக்கூறியதுபோல "அண்ணல் யானை வேந்தர்க், கின்னா னாகிய வினியோன் குன்று' என்று முன்னுங்கூறியிருத்தல் காண்க. (ககூ)

(கஉ0.) வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்
களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து
கீழு மேலு மெஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப வவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுனிய மட்டின் றேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோ டாலம் பூசன் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
விரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
யாடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பிற் பகைவ
ரோடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற னாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள். — வெப்புள் விளைந்த - வெம்மைமுதிர்ந்த, வேங்கை செஞ்சுவல் - வேங்கைமரத்தையுடைய சிவந்த மேட்டுநிலத்து, கார் பெயல் கலித்த - கார்காலத்து மழையால் மிகுந்த, பெரு பாடு ஈரத்து - பெரியசெவ்வியையுடைய ஈரத்தின்கண், பூழி மயங்க - புழுதி கலக்க, பல உழுது வித்தி - பலசால்பட உழுது விதைத்து, பல்லி ஆடிய - தாளியடிக்கப்பட்ட, பல்கிளைச் செவ்வி - பலகிளையையுடைய செவ்வியின்கண், களை கால் கழாலின் - களையை அடியில்நின்றும் களைதலால், தோடு ஒலிபு நந்தி - இலை தழைத்துப் பெருகி, மென்மயில் புனிறு பெடை கடுப்ப நீடி - மெல்லிய மயிலினது ஈன்று அணிய பேடையையொப்ப ஓங்கி, கரு தாள் போகி - கரியதண்டு நீண்டு, ஒருங்கு பீள் விரிந்து - எல்லாம ஒருங்கு சூல் விரிந்து, கீழும் மேலும் எஞ்சாமை பல காய்த்து - கதிரினது அடியும் தலையும் ஒழியாமல் மிகக்காய்த்து, வாலிதின் விளைந்த புதுவரகு அரிய - சீரிதாகவிளைந்த புதியவரகை அறுக்க, தினைகொய்ய - தினையை அரிய - கவ்வை கறுப்ப - எள்ளிளங்காய் கறுப்ப, அவரை கொழுங்கொடி விளர் காய் கோள் பதமாக - அவரையினது கொழுவிய கொடியின்கண் வெள்ளைக்காய் அறுக்குஞ் செவ்வியாக, நிலம் புதை பழுனிய மட்டு இன் தேறல் - நிலத்தின்கண் புதைக்கப்பட்டு முற்றிய மதுவாகிய இனிய தேறலை, புல் வேய் குரம்பை குடிதொறும் பகர்ந்து - புல்லாலே வேயப்பட்ட சிறியமனையின்கண் குடியுள்ளஇடந்தோறும் நுகரக் கொடுக்க, நறு நெய் கடலை விசைப்ப சோறு அட்டு - நறியநெய்யிலே கடலைதுள்ள அதனோடு சோற்றைச் சமைத்து, பெருந்தோள் தாலம் பூசல் மேவர - ஊட்டுதற்குப் பெரியதோளினையுடைய மனையாள் கலம்பூசுதலைப் பொருந்த, வருந்தா யாணர்த்து நந்துங்கொல்லோ - வருந்தவேண்டாத புது வருவாயையுடைத்து, முன்பு; இனி அதுகெடும்போலும்; இருபல் கூந்தல் மடந்தையர் தந்தை - கரிய பலவாகிய கூந்தலையுடைய மடந்தையர்க்குத் தந்தையாகிய, ஆடு கழை நரலும் சேண் சிமை - அசைந்த மூங்கில் இழைந்தொலிக்கும் உயர்ந்த உச்சியையுடைய, புலவர் பாடி ஆனா பண்பின் - புலவர் பாடப்பட்டு அமையாத தன்மையையுடைய, பகைவர் ஓடு கழல் கம்பலை கண்ட - பகைவரது புறங்கொடுத்தோடும் வீரக்கழலினது ஆரவாரத்தைக் கேட்டு நாணிப் பின்செல்லாது கண்டுநின்ற, செரு வெம் சேய் பெருவிறல நாடு - போரை விரும்பிய சேயையொக்கும் பெரிய வென்றியையுடையவனது நாடு.—எ - று.

வித்தி ஆடிய செவ்வியென வியையும். நந்தியென்பதுமுதலாய வினையெச்சங்கள் விளைந்தவென்னும் பெயரெச்சவினையோடும், அரியவென்பது முதலாக மேவரவென்ப தீறாக நின்ற வினையெச்சங்கள் யாணர்த்தென்னுங் குறிப்புவினையோடுமுடிந்தன. பகர்ந்தென்பது, பகரவெனத் திரிக்கப்பட்டது விசைப்பச் சோறட்டு மேவரவென இயையும்.

செருவெஞ்சேஎய் பெருவிறலது சேட்சிமையையுடைய நாடு, யாணர்த்து; அது நந்துங்கொல்லோவெனக் கூட்டுக.

பெருந்தோளென்பது, பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வெப்புளென வெம்மைக்கு அதுவும் ஓர் வாய்பாடாய்நின்றது; வெம்மையை உள்ளும் முதிர்ந்தவெனினு மமையும்.

கு - பு. பல்லியாடுதல், தாளியடிக்தல், ஊடடித்தல் என்பன ஒரு பொருட்சொற்கள்; அது, நெருங்கிமுளைத்த பயிர்களைக் கலைத்தற்கும் வருத்தமின்றிக் களைபிடுங்குதற்குமாகக் கீழ்நோக்கியுள்ள கூரியபல முளைகளையுடைய பலகையின் இரண்டுபக்கத்தும் மேற்புறத்திலுள்ள வளையங்களிற் கட்டியகயிறுகளைச் சேர்த்துப்பூட்டிய நுகத்தை வாய்கட்டப்பட்டுள்ள எருதுகளின் பிடரியில் வைத்துப் பூட்டி உழுக்செய்தல்; இத்தொழிலைத் தென்னாட்டிற் பரக்கக்காணலாம். செவ்வி - காலம். கறுப்ப - முற்ற; "சிறுதினை கொய்யக் கௌவை கறுப்ப" (உஎக) என்னும் மதுரைக்காஞ்சி உரையாலுணர்க. வேய்தல் - மேய்தல் கலம் - உண்கலம். பாரியை இங்கே மடந்தையர்தந்தையென்றதுபோலக் கீழ் ககஎ - ம் செயயுளிலும் "ஆய்தொடியரிவையர் தந்தை" என்று கூறியிருத்தல் காண்க. சேய் - முருகக்கடவுள். தந்தையாகிய பெருவிறல் என இயைக்க நாடு - பறம்புநாடு நந்தி என்பது முதலாய வினையெச்சங்கள் - நந்தி, நீடி, போகி, விரிந்து, காய்ந்து என்பன. அரிய என்பது முதலிய வினையெச்சங்கள் - அரிய, கறுப்ப, ஆக, பகர, மேவர என்பன. (கஉ0)

(கஉக.) *ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

திணை - அது; துறை - பொருண்மொழிக்காஞ்சி.
மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

இ - ள்.—ஒருதிசை ஒருவனை உள்ளி - ஒருதிசைக்கண் வள்ளியோனாகிய ஒருவனைநினைந்து, நாற்றிசை - நான்குதிசையிலுமுள்ள, பரிசின்மாக்கள் பலரும் வருவர் —; வரிசை அறிதல் அரிது - அவருடைய தரத்தையறிதல் அரிதாகும்; ஈதல் பெரிதும் எளிது - கொடுத்தல் மிகவும் எளிதாகும்; மாவள் தோன்றல் - பெரியவண்மையையுடையதலைவ! அது நற்கு அறிந்தனை ஆயின் - நீ அவ்வரிசையறிதலை நன்றாக அறிந்தாயாயின், புலவர்மாட்டு பொதுநோக்கு ஒழி - அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒருதரமாகப்பார்த்தலைத் தவிர்வாயாக —எ - று.

இப்பாட்டினை, பாடாண்டிணைக்குரிய உருவகைவிடையுள் சிறிதெனற விடைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல். பொரு. புறத்திணையியல், ங௬ - ம் சூத்திரவுரை].

ரு - பு. வள்ளியோன் - வண்மையையுடையோன். நற்கு - நன்கின் [illegible]; "பண்கேட்டறியாப் புலம்பெயர் புதுவிர்" என்பது மலைபடுகடாம், [illegible] அருங்கலச்செப்பிலுள்ள தறள்வேண் [illegible] பாதுகாப்பது. மதி - முன்னிலையசை [illegible] "[illegible] பொதுநோக்கான்" என்னும் திருக்குறள் இங்கே அறி[illegible]

(கஉக)

கடல்கொளப் படாஅ துடலுந ரூக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
யழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவற் றுப்பா கியரென
வேத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
யரிவை தோளள வல்லதை
நினதென விலைநீ பெருமிதத் தையே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—கடல் கொளப்படாது - கடலாற்கொள்ளப்படாது, உடலுநர் ஊக்கார் - அதனைக்கொள்ளுதற்குப் பகைவர் மேற்கொள்ளார், கழல் புனை திருந்து அடி காரி - வீரக்கழலணிந்த இலக்கணத்தால் திருந்தியநல்ல அடியையுடைய காரி! நின் நாடு—, அழல் புறந்தரூஉம் அந்தணரது - அது வேள்வித்தீயைப்பாதுகாக்கும் பார்ப்பாருடையது; வீயா திருவின் - கெடாத செல்வத்தினையும், விறல் கெழு தானை - வென்றிபொருந்திய படையையுமுடைய, மூவருள் ஒருவன் துப்பாகியர் என - மூவேந்தருள் ஒருவனுக்கு வலியாகவேண்டுமென்று, எத்தினர் தரூஉம் கூழ் - அம்மூவர்பால்நின்றும் வந்தோர் தனித்தனி புகழ்ந்து நினக்குத் தரும் பொருள், நும் குடி வாழ்த்தினர் வரூஉம் இரவலரது - நுமதுகுடியை வாழ்த்தினராய் வரும் பரிசிலருடையது; ஆதலால், வடமீன் புரையும் கற்பின் - வடதிசைக்கண்ணேதோன்றும் அருந்ததியையொக்குங் கற்பினையும், மடமொழி - மெல்லிய மொழியினையுமுடைய, அரிவை தோளளவு அல்லதை - அரிவையுடைய தோள்மாத்திரையல்லது, நினதென இலை - நின்னுடையதென்று சொல்ல ஒன்றுடையையல்லையாயிருக்கவும், நீ பெருமிதத்தை - நீ பெரியசெருக்கினையுடையையாயிராநின்றாய்; இதற்குக் காரணம் என்னை? எ - று.

எத்தினர்தரூஉமென்று பன்மையாற்கூறியது, அவ்வேந்தன் அமைச்சரை. மூவருள் யானொருவன்; எனக்குத் துப்பாகியரென அம்மூவரும் எத்தினர்தரூஉமென்று உரைப்பினு மமையும்.

நாடு அந்தணரது; கூழ் இரவலரது; அரிவைதோளளவல்லதை நினக்கு உரித்தாகக்கூறுதற்கு யாதும் இல்லையாயிருந்தது; நீ பெருமிதத்தையுடையையா யிருந்தாயென வியந்துகூறியவாறு.

கு - பு. காரியின் நாடு மலையும் மலைசார்ந்த இடமு மாதலின், 'கடல் கொளப்படாது உடலுநர் ஊக்கார்' என்றார். வேறுள்ளசங்கச்செய்யுட்களால் இந்தமலையமான்திருமுடிக்காரியின் இராசதானி பெண்ணையாற்றங்கரையி லுள்ள திருக்கோவலூரென்றும், இவனாடு அதனைச்சூழ்ந்த நாடென்றும் தெரிகின்றது. அந்நாடு மலையமானாடென்றும் அதன்சிதைவாகிய மலாடென் றும் வழங்கப்படுதல் இவனுக்கும் இவன்குலத்தோர்க்கும் உரித்தாயிருந்தது பற்றியென்று சொல்லல் வேண்டும். திருக்கோவலூரில் அரசாண்டிருந்த ஸ்ரீ மெய்ப்பொருணாயனாரை பெரியபுராணத்திற் 'மலாடர்கோமான்' என்று அருண்மொழித்தேவர் அருளிச்செய்திருத்தல்காண்க. "அந்தண ரென்போரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுக லான்" எனத் திருவள்ளுவநாயனாரும், வேதாந்தத்தை அணவுவோ ரென்று நச்சி னார்க்கினியரும் பொருள்செய்திருத்தலின், அந்தணரென்பதற்கு இவ்விரண்டு பொருளுங் கொள்ளுதல் தக்கது. ஆகிய - வியங்கோள். 'கூழே, நுங்குடி வாழ்த்தினர்வரூஉம் இரவலரதுவே' என்றது கீழ் க௱அ - ம் பாட்டில், 'பற ம்பு பாடின ரதுவே' என்றாற்போல நின்றது. அரிவையென்றது - மலைய மான்றிருமுடிக்காரியின்மனைவியை. (கஉஉ)

(கஉ௩.) நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கு மெளிதே தேரீ தல்லே
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—நாள கள் உண்டு - நாட்காலையே மதுவையுண்டு, நாள் மகிழ் மகிழின் - நாளோலக்கத்து மகிழ்ச்சியை மகிழின், தேர் ஈதல் யார்க்கும் எளிது - தேர்வழங்குதல் யாவர்க்கும் எளிதாகும்; தொலையா நல்லிசை விளங்கும் மலையன் - கெடாத நல்ல புகழ்விளங்குமலையன், மகிழாது ஈத்த இழை அணி நெடுந்தேர் - மதுநுகர்ந்து மகிழாது வழங்கிய பொற்படைகளால் அணியப்பட்ட உயர்ந்ததேர், பயன் கெழு முள்ளூர் மீமிசை பட்ட - பயன்பொருந்திய முள்ளூர் மலையுச்சியின்கணுண்டாகிய, மாரி உறையினும் பல - மழையினது துளியினும் பல.—எ - று.

இதன்கருத்து - எனையோர்கொடை செயற்கையென்றும், இவன்கொ இயற்கையென்றுங் கூறியவாறு.

கு - பு. ஈதல்லே - விகாரத்தால் லகரவொற்று விரிந்தது. நாட்காலை விடியற்காலம். மது - இங்கே வீரபானம்; அது, பின் 'தேறல்' என்பதனாற் பெறப்பட்டது. நாளோலக்கம் - எல்லாரும்வந்து தன்னை எளிதிற் காணும்படி அரசன் காட்சிக்கெளியனாய் வீற்றிருக்குங் காலைச்சமயச்சபை. இது நாளவையென்றுங் கூறப்படும்; "எங்கோ னிருந்த கம்பலை மூதூர், உடையோர் போல விடையின்று குறுகிச், செம்ம லாளவை யண்ணாந்து புகுத, லெம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே" என்னும் இந்நூல் ௨௪ - ம் செய்யுளாலுணர்க. மகிழ்தல் - மதுவையுண்ணல்; "வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து" என்று பின்வந்துள்ளது; ௧௨௯. படை - மெத்தைமுதலியவை; ஆயுதங்களுமாம். முள்ளூர்மலை, "முரண்கொ டுப்பிற் செய்வேன் மலையன், முள்ளூர்க் கானம்" எனவும், "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப், பலருடன் கழித்தவாண் மலையன்" எனவும் இவனுடையதாக இருத்தல் பற்றியே, அகநானூறு முதலியவற்றிற் பாராட்டப்பட்டிருத்தல்காண்க. பாட்டுடைத்தலைவனுடைய மலையிற்பெய்யும்மழைத்துளிகளைக்காட்டிலும் பலவாகவென்றுதல், அவனுடைய ஆறுமுதலியவற்றிலுள்ளமணலினும் பலவாகவென்றுதல், அவனுடைய இயல்பைப் புகழ்ந்து வாழ்த்துவது பண்டைக் கவிகளின் மரபாதலால், 'முள்ளூர்மீமிசைப், பட்ட மாரியுறையினும் பலவே......யீத்தநெடுந்தேர்' என்றார்; கீழ் ௩௪ - ம் பாட்டில் "இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக், கொண்டன் மாமழை பொழிந்த, நுண்பஃ றுளியினும் வாழிய பலவே" என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழாரும், ௫௫ - ம்செய்யுளில் "நீடு வாழியர் நெடுந்தகை தாழ்நீர், வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி, னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக், கடுவளி தொகுப்ப வீண்டிய, வடுவா ழெக்கர் மணலினும் பலவே" என்று பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரைமருதனிளநாகனாரும் கூறியிருத்தல் காண்க. (௧௨௩)

(௧௨௪.) நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள். நாள் அன்று போகி - நல்லநாள் அன்றாகப் போய், புள் இடை தட்ப - புள்நிமித்தம் இடையேநின்று தடுப்ப, பதன் அன்று புக்கு - செவ்வியன்றாகச் சென்றுகூடி, திறன் அன்று மொழியினும் - கூறுபாடன்றாக முனியும்வார்த்தைகளைச் சொல்லினும், வறிது பெயர்குவரல்லர் - வறிதாக மீள்வாரல்லர்; நெறி கொள - ஒழுங்குபட, பாடு ஆன்று இரங்கும் அருவி - ஓசை

நிறைந்து ஒலிக்கும் அருவியையுடைய, பீடு கெழு மலையின் பாடியோர் - பெருமைபொருந்திய மலையையுடையோனைப் பாடியவர்கள்.—எ - று.

மலையற்பாடியோர், வறிதுபெயர்குவரல்லரெனக்கூட்டுக.

அன்றியென்பது, அன்றெனத் திரிந்தது; செய்யுளாகலின். வறிதென்னுங் குறிப்புவினையெச்சம், பெயர்குவரல்லரென்பதனுட் பெயர்தலோடுமுடிந்தது; வறியரென்றுரைப்பாருமுளர்.

கு - பு. நாள் - ஈண்டு நல்லநாளின்மேற்று. புள்நிமித்தம் - பறவைச் சகுனம்; நிமித்தமென்பதற்கு - அறிவிப்பதென்றுபொருள்; பின்வரும் நன்மை தீமைகளை யறிவிப்பதென்றபடி; “ஏதம்மள வையின்வந்தன வலமும்மயி லிடமும், காகம்முத லியமுந்திய தடைசெய்வன கண்டான்” என்னுங் கம்பராமாயணச் செய்யுள் புள்நிமித்தம் இடையேதடுத்தலைத்தெரிவித்தல்காண்க; (பால. பரசு. ரு). கூறுபாடு - மொழியுந்திறங்கள்; இதனை, “திறனறிந்து சொல்லுக” என்னுந் திருக்குறளாலும், பரிமேலழகர் அதற்கெழுதிய விசேடவுரையாலும் உணர்க. முனியும்வார்த்தை - வெறுக்கும் வார்த்தை. வறிதாகமீளல் - பயனின்றிமீளல்.　　(௧௨௪)

(௧௨௫.) பருத்திப் பெண்டின் பனுவ லன்ன
நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை
பரூஉக்கண் மண்டையொ டூழ்மாறு பெயர
வுண்கு மெந்தைநிற் காண்குவந் திசினே
நள்ளா தார்மிடல் சாய்த்தவல் லாள
நின்மகி ழிருக்கையே
யுழுத நோன்பக டழிதின் றாங்கு
நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே
குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றோனு நிற்கூ றும்மே
வெலீஇயோ னிவனெனக்
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்து வந்து சமந் தாங்கிய
வல்வேன் மலைய னல்ல னாயின்
னல்லமர் கடத்த லெளிதும னமக்கெனத்
தோற்றோன் றானு நிற்கூ றும்மே
தொலைஇயோ னிவனென
வொருநீ யாயினை பெரும பெருமழைக்
கிருக்கை சான்ற வுயர்மலைத்
திருத்தகு சேஎய்நிற் பெற்றிசி னோர்க்கே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் *துப்பாகிய தேர் வண்மலையனை வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது.

இ - ள். பருத்தி பெண்டின் பனுவல் அன்ன - பருத்தி நூற்கும் பெண்டாட்டியது சுகிர்ந்த பஞ்சுபோன்ற, நெருப்பு சினம் தணிந்த நிணம் தயங்கு கொழுங்குறை - நெருப்புத் தன்வெம்மையாறுதற்கு ஏதுவாகிய நிணமசைந்த கொழுவியதடிகளை, பரூஉ கண் மண்டையோடு - பெரிய உடலிடத்தை யுடைய கள்வார்த்த மண்டையோடு, ஊழ் மாறு பெயர உண்கும் - முறை முறையாக ஒன்றற்கொன்று மாறுபட உண்பேமாக, எந்தை - எம்முடைய தலைவ, நின் காண்கு வந்திசின் - நின்னைக் காண்பேன் வந்தேன், நள்ளாதார் மிடல் சாய்த்த வல்லாள - பகைவரது வலியைத்தொலைத்த வலிய ஆண்மையையுடையோய்! நின்மகிழ் இருக்கை - நினது மகிழ்ச்சியையுடைய இருக்கைக்கண், உழுத நோன் பகடு அழி தின்றாங்கு - உழுத வலியபகடு பின் வைக்கோலைத்தின்றாற்போல, நீ நயந்து உண்ணும் நறவு நல் அமிழ்தாக - நினதுதாளாற்றலாற்செய்த பொருளை யாவர்க்கும் அளித்துப் பின் நீவிரும்பி யுண்ணும்கள்ளு நல்லஅமிழ்தாவதாக, குன்றத்து அன்ன களிறு பெயர - மலைபோலும் யானை பட, கடந்து அட்டு வென்றோனும் வெலீஇயோன் இவனென நின் கூறும் - எதிர்நின்று கொன்று வென்றவனும் நம்மை வெல்வித்தோனிவனென நின்னையே மகிழ்ந்து சொல்லும், கழல் அணி பொலிந்த சேவடி - வீரக்கழலாகிய அணியாற்சிறந்த செய்ய அடியாலே, நிலம் கவர்பு - போர்க்களத்தைக்கைக்கொள்ளவேண்டி, விரைந்துவந்து சமரம் தாங்கிய - விரைந்துவந்து போரைத்தடுத்த, வல் வேல் மலையன் அல்லனாயின் - வலிய வேலினையுடைய மலையன் அல்லனாயின், நல் அமர் கடத்தல் - நல்லபோரை வெல்லுதல், நமக்கு எளிதுமன் என - நமக்கு எளிதென, தோற்றோன் தானும் தொலைஇயோன் இவனென நின் கூறும் - தோற்றவனும் நம்மைத் தொலைவித்தான் இவனென நின்னையே புகழ்ந்துசொல்லும்; ஆதலால்—, ஒருநீயாயினை - நீஒருவனாயினாய், பெரும—! பெருமழைக்கு இருக்கை சான்ற - பெரிய மழைக்கு இருப்பிடமாதற்கு அமைந்த, உயர் மலை - உயர்ந்த மலையையுடைய, திருத்தகு சேஎய் - திருத்தக்கசேயை ஒப்பாய்; நின் பெற்றிசினோர்க்கே - நின்னை நட்பாகவும் பகையாகவும் பெற்றோர்க்கு.—எ - று.

பனுவலன்னநிணமெனக இயையும். நிலங்கவர்பென்பது, கவரவெனத் திரிக்கப்பட்டது; எமதுநிலத்தைக் கைக்கொண்டெனினுமமையும். தாளாற்றலாற் செய்தபொருளில் நல்லனவெல்லாம் பரிசிலர்க்குவழங்கி எஞ்சியது உண்டலான், அழிதின்றாங்கென்றார். காண்குவந்தென்பன - ஒருசொன்னீர்மைப்பட்டு உண்குமென்பதற்கு முடிபாய்நின்றன. உண்குமென்பது,

* துப்பாகிய ஒருவனும் மலையனை வடமவண்ணத்தன் பேரிசாத்தனென்றும்பாடிபேதமுண்டு.

சுற்றத்தை உளப்படுத்துநின்றமையின், பன்மையொருமை வழுவமைதியாய் நின்றது. மன் - கழிவின்கண் வந்தது.

பெரும, சேஎய், வென்றோனும், வெலீஇயோனிவனென நிற்கூறும்; தோற்றோனும், தொலைஇயோனிவனென நிற்கூறும்; அதனால், நிற்பெற்றிசினோர்க்கு ஒருநீயாயினையாதலால், நின்மகிழிருக்கைக்கண்ணே உண்கும் காணகுவந்திசின்; பகடு அழிதின்றாங்கு நீ உண்ணுநறவு நல்ல அமிழ்தாக வென மாறிக்கூட்டுக.

'நெருப்புச் சினந்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை' என்பதற்கு எரியாது பூத்துக்கிடக்கின்ற தழற்போலும் நிணந்தயங்குகொழுங்குறையெனினுமமையும். பருஉக்கண்மண்டையென்பதற்குக்கள்ளையுடைய உடலிடம் பரிய மண்டையெனினு மமையும்.

கு - பு. பெண்டாட்டி - பெண்மையையுடையாள்; 'ஒருபெண்டாட்டி தம்மொரொடுகலாய்த்து' என்பது இறையனாரகப்பொருளுரை. சுகிர்ந்த - வடித்த. தணிந்த - காரியப்பொருட்டு. சுடி - தசை. கண் - இடம். பகடு ஆண்எருமை; எருதுமாம். அழி - வைக்கோல். தாள் - முயற்சி. சேய் முருகக்கடவுள்; இவர் மலையையுடையாராதலால் "சேயோன்மேயமைவரையுலகமும்" என்பதனாலுணர்க. சோழற்குத்துப்பாகிய - சோழனுக்குவலியாகிய.

திணை விளக்கம்.

[இந்தப்பகுதியில் வந்துள்ள திணைகளின் விளக்கம்.]

காஞ்சித்திணை :—அஃதாவது பகையரசன் போர்க்குவந்துவிட, ஓரரசன் காஞ்சிப்பூவைச்சூடித் தன்னிடத்தைப் பாதுகாத்தல்; "வெஞ்சின வேந்தன் விடுதர வேந்தன், காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று."—புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப்படலம், ௧. இத்திணையமைந்த பாட்டுக்களின் எண்கள் - ௧௦௯, ௧௧௦, ௧௧௧.

பாடாண்டிணை :—அஃதாவது ஒருவனுடைய கீர்த்தியும் வலியும் கொடையும் அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்துசொல்லுதல்; "ஒளியு மாற்றலு மோம்பா வீகையு, மளியு மென்றிவை யாய்ந்துரைத் தன்று."—புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்டிணைப்படலம், ௧. இத்திணையமைந்த பாட்டுக்களின் எண்கள் - ௧௦௧, ௧௦௨, ௧௦௩, ௧௦௫, ௧௦௬, ௧௦௭, ௧௦௮, ௧௨௨, ௧௨௩, ௧௨௪.

பொதுவியற்றிணை :—வெட்சித்திணைமுதலிய புறத்திணைகட்கெல்லாம் பொதுவாயுள்ளனவும் அவற்றிற்கூறுதொழிந்தனவுமாகிய செய்திகளைக் கூறுவது. இத்திணையமைந்த செய்யுட்களின் எண்கள் - ௧௧௨, ௧௧௩, ௧௧௪, ௧௧௫, ௧௧௬, ௧௧௭, ௧௧௮, ௧௧௯, ௧௨௦, ௧௨௧.

வாகைத்திணை :—அஃதாவது வாகைப்பூவைத் தலையிலேசூடிப் பகைவரைக்கொன்று ஆரவாரித்தல்; "இலைபுனை வாகை சூடி யிகன்மலைந், தலைகடற்றானை யரசட் டார்த்தன்று."—புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ௧. இத்திணையமைந்த செய்யுட்களின் எண்கள் - ௧௦௪, ௧௨௫.

துறைவிளக்கம்.

[இந்தப்பகுதியில் வந்துள்ள துறைகளின் விளக்கம்.]

அரசவாகை :—அஃதாவது அரசனது இயல்பைக்கூறுதல்; 'பகலன்ன வாய்மொழி, யிகல்வேந்த னியல்புரைத்தன்று'.—புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ௩. புறநானூற்று ௪௩-ம் செய்யுளின் விசேடவுரையில் பொறுத்தற்கரிய பிழையைப் பொறுத்த குணவென்றியான் அரசவாகையாயிற்று' என்று எழுதியிருக்கின்றனர் இந்நூல் உரையாசிரியர். ௧௦௪, ௧௨௫.

இயன்மொழி :—அஃதாவது தலைவனெதிர்சென்றேறி அவன்செய்தியையும் அவன்குலத்தோர் செய்தியையும் அவன்மேலேயேற்றிப் புகழ்தலென்பர் நச்சினார்க்கினியர். இதனைத் தொல்காப்பியப் புறத்திணையியலில் ௩௫-ம் சூத்திரவுரையிற்காண்க; இஃது இயன்மொழிவாழ்த்தென்றுங் கூறப்படும். புறநானூற்றில் ௧௪-ம் செய்யுளின் விசேடவுரையில் 'தம்கையின் மென்மையது இயல்புங் கூறுவார் அரசன்கையின் வலிய இயல்புங்கூறினமை

யான் இஃது இயன்மொழியாயிற்று' எனவும், ௧௫ - ம் செய்யுளின் விசேடவுரையில் 'இவை எப்பொழுதுஞ் செய்தல் இயல்பெனக்கூறினமையின் இஃது இயன்மொழியாயிற்று' எனவும், ௪௯ - ம் செய்யுளின் விசேடவுரையில் 'அவனது இயல்பைப் புகழ்ந்தமையான் இயன்மொழியுமாயிற்று' எனவும், ௧௭௩ - ம் செய்யுளின் விசேடவுரையில் 'பண்ணனது இயல்பு கூறி வாழ்த்தியவாறு' எனவும் எழுதிப்போந்தார் இந்நூலுரையாசிரியர். ௧0௨, ௧0௬, ௧0௭, ௧0௮, ௧௨௨, ௧௨௩, ௧௨௪,

கையறுநிலை:—அஃதாவது அரசனிறப்ப அவனைச் சேர்ந்தோர் அவ்விறந்துபாட்டைச்சொல்லி ஒழுக்கந்தளர்தல்; 'செய்கழன் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர், கையற வுரைத்துக் கைசோர்ந் தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியல், ௧௪. புறநானூற்று ௨௪௩ - ம் செய்யுளின் விசேடவுரையில் 'இளமைகழிந்து இரங்கிக்கூறுதலான் இதுவும் கையறுநிலையாயிற்று' என்றுஎழுதினார்இந்நூலுரையாசிரியர். ௧௧௨, ௧௧௩, ௧௧௪, ௧௧௫, ௧௧௬, ௧௧௭, ௧௧௮, ௧௧௯, ௧௨0.

பரிசில்கடாநிலை:—அஃதாவது 'பரிசிலமை நீட்டித்தலமையாது நெடிது கொண்டொழுகிய தலைவனுக்குப் பரிசில் வேட்டோன் தன் கடும்பினது இடும்பைமுதலியன கூறித் தான் குறித்த பொருண்மையினைச் செலுத்திக் கடாவின நிலை' என்பர் நச்சினார்க்கினியர். புறநானூற்று ௧௧ - ம் செய்யுளின் விசேடவுரையில் 'பாடினி இழைபெற்றாள், பாணன் பூப்பெற்றான், யான் அதுபெறுகின்றிலேனெனப் பரிசில்கடாநிலையாயிற்று' என்று எழுதியிருக்கின்றனர் இந்நூலுரையாசிரியர். ௧0௧.

பொருண்மொழிக்காஞ்சி:—அஃதாவது முனிவர் தெளிந்தபொருளைச் சொல்லுதல்; 'எரிந்திலங்குஞ் சடைமுடி முனிவர், புரிந்து கண்ட பொருண்மொழிந் தன்று'.—புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப்பொதுவியல், ௩. ௧௨௧.

மகண்மறுத்தல்:—அஃதாவது ஒருவீரன் மணங்கோடற்குத் தம்மகளை வேண்டச் சிற்றரண்களிலுள்ளோர் மறுத்துச்சொல்லுதல்; 'விம்முறுநன் மகன்வேண்ட, வம்மதிலோர் மறுத்துரைத்தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, நொச்சிப்படலம், ௯. இத்துறையை மறமென்பர் பாட்டியலுடையார்; அதனைக் கலம்பகத்திற்காண்க. ௧0௯, ௧௧0, ௧௧௧.

விறலியாற்றுப்படை:—அஃதாவது அரசனுடைய கீர்த்தியைப் பாடும் பாடினியை வழிப்படுத்தல்; 'திறல்வேந்தன் புகழ்பாடும், விறலியையாற்றுப் படுத்தன்று'.—புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௧. ௧0௩, ௧0௫.

பிரயோகவிளக்கம்.

அடி - அடியார்க்கு நல்லாருரை	சொல் - சொல்லதிகாரம்
இலக்கணவி - இலக்கணவிளக்கவுரை	தொல் - தொல்காப்பியம்
எழுத் - எழுத்ததிகாரம	நச் - நச்சினார்க்கினியருரை
சங் - சங்கரநமசிவாயருரை	நன் - நன்னூல்
சிலப் - சிலப்பதிகாரம்	பக் - பக்கம்
சூ - சூத்திரம்	பொரு - பொருளதிகாரம்

புறநானூற்றுச்செய்யுளெண்.	செய்யுள். அமைந்தஇடம்.
௧௦௫.	"சேயிழை பெறுவை ..... செலினே" தொல் பொரு. சூ. ௯௧ - நச
௧௦௭.	"பாரிபாரி.........புரப்பதுவே" இலக்கணவி சூ. ௬௪௫. தொல் பொரு. சூ ௯௦ - நச்; "பாரிபாரி ... . புலவர்" சூ. ௩௦௯.
௧௦௯.	"அளிதோதானே.........யும்மே" தொல் பொரு. சூ. ௬௭ - நச. "சிறியிலை வெதிரி னெலவிளை யும்மே" நன். சூ. ௧௫௫ - சங.
௧௧௩	"நீர்வார் கண்ணேந தொழுதுநிற் பழிச்சி" இலக்கணவி. சூ. ௨௫௦. நன். சூ. ௩௫௧ - சங.
௧௧௬.	"தீநீரப்பெருங ....முழுநெறி" சிலப். பக ௪௭ - வரி, ௧௬ - அடி.
௧௧௭	"மைம்மீன்புகையினும் .. .. ..யோடினும்" சிலப். பக். ௨௪௦ - வரி, ௨௪ - அடி. "கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி" தொல் சொல். சூ. ௬௭ - நச
௧௨௧.	"ஒருதிசையொரு . .....மாட்டே" தொல். பொரு. சூ. ௯௧ - நச. புறத்திரட்டு.
௧௨௪.	"நாளன்று.........மொழியினும்" இலக்கணவி. சூ. ௯௧; "நாளன்றுபோகி" சூ. ௨௪௬. தொல். எழுத். சூ. ௨௩௭ - நச்; சொல். சூ. ௨௩௦. "நாளன்று.........பாடியோரே" நன். சூ. ௧௭௩ - சங்; 'நாளன்று...... ..கொள" சூ. ௩௫௫.
௧௨௫.	"நெருப்புச் சினந்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை" தொல். பொரு. சூ. ௨௫அ - நச் "உழுத நோன்பக டழிதின் றாங்கு" சூ. ௨௯௫.